476

476/3-57

ஸ்ரீ பர்வத வர்த்தனி

ஆசிரியர்: V. M. நடேச நாட்டார்

மலர் 1 | ஹேவிளம்பி ஆடித் திங்கள் ஜுலை 1957 | இதழ் 1

பொருளடக்கம் — பக்கம்

1. சங்கத்தின் ஐக்கியமும் நமது கடமையும் ... 323
2. பெண் பார்த்தல் ... 328
3. ஆசிரியர்க்குக் கடிதம் ... 331
4. சொல்லில் பல விதம் ... 332
5. குழந்தை ஒரு தொல்லை ... 335
6. திருக்குறள் ... 337
7. வைத்தியம் ... 340
8. யார் பெற்ற செல்வம்! ... 344
9. சென்னை ராஜ்ய பருவத. சங்கம் 26வது மாநாட்டின் வரவு செலவு ... 348
10. "தேசிங்கு ராஜன்" ... 350

ஐ
ணஉ11, N56SP
N57·1·11
187254

சென்னை மாகாண
...ராஜகுலசங்கம்
...ாத வெளியீடு

விலை 4 அணா

கவனிப்பு

சங்க சம்பந்தமானதும்,

பர்வத வர்த்தனி

சம்பந்தமான எல்லா

கடிதமும், பணமும்

நெ. 55, முத்துமாரி செட்டி வீதி

மண்ணடி

விலாசத்திற்கே அனுப்பவும்.

ஸ்ரீ பர்வதவர்த்தனி ஓராண்டு முடிவு பெறுவதால் அடுத்த இதழில் சத்தா பாக்கிதாரர்கள் பெயரும் விலாசமும் வெளியிடப்படும். ஆதலால் உடனே பணம் அனுப்பிவைப்பது நலமாகும்.

(ஆசிரியர்)

29—7—1957

ஒவ்வொரு ஜில்லாவிலும் செல்வாக்குள்ள, தந்நலமற்ற, சமூக நலனில் அக்கறை கொண்டுள்ள தலைவர்கள் பலர் இருக்கத்தான் இருக்கிறார்கள். அவர்கள் முயன்றால் எந்தவிதமான காரியத்தையும் முறைப்படி சுலபமாய்ச் சாதித்துக்கொள்ளமுடியும் என்பதில் தடையில்லை. அவர்கள் ஒன்றுசேர்ந்து முன் சொல்லியுள்ளபடி ஒரே ஐக்கியமாக இருக்க முழு முயற்சியும் செய்யவேண்டும். எத்துணையோ கிராமங்களில் தற்குறித்தன்மையோடு இருக்கும் நம்மவர்கள் ஒன்றுமே அறியாது மற்றவர்களால் ஏமாற்றப்பட்டு மிகவும் அவதிக்குள்ளாகி வருகின்றார்கள். அவர்களையும் விழிப்படையச்செய்து மற்றவர்களைப்போல நன்மையை அடையச் செய்யவேண்டியது அந்தந்த ஜில்லாக்களிலுள்ள தலைவர்களின் கடமையாகும் என்பதை மற்றவர்கள் சொல்லித்தெரிந்துகொள்ள வேண்டியதில்லை.

மீன் தொழில் செய்வது, அதனால் லாபமடைவது, வாழ்க்கை நடத்துவது என்பதுமட்டும் நமக்கு முக்கிய பிரச்சினையல்ல. அதோடு நாம் செய்யவேண்டிய சமூகநலக் காரியங்கள் பல இருக்கின்றன. அவைகளுக்காகவேனும் நாம் ஒன்றுபடவேண்டியது மிகவும் முக்கியம். கல்வி வசதி, உத்தியோக வசதி, தொழில் அனுபவம், வீட்டு வசதி, மார்க்கெட் வசதி, சுகாதார வசதி முதலியவைகளைப் பெறுவதோடுகூட சமூகத்தில் மற்றவரால் எள்ளி நகையாடப்படாமல் நாமும் மக்கள் தாம், மக்கள் தன்மையுடையவர்கள் தாம் என மதிக்கப்படுவதே முக்கியமானதாகும்.

இவைகளெல்லாம் அடைவதற்கு நாம் பலகாலும் அரசியலாரைக் கேட்டுக்கொண்டே இருக்கின்றோம். அதிர்ஷ்ட வசமாக இப்பொழுது நமக்கு மீன் தொழில் வள அபிவிருத்தி போர்டில் இருவரைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அவர்கள் சமூக விருத்திக்கான விஷயங்களைச் செய்வதற்கான வழிமுறைகளைப் பொது மக்கள் தெரியப்படுத்த வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். ஜில்லாக்கள் தோறும் மீனவர் க்ஷேமநல அதிகாரிகளை நியமிப்பது, சட்ட சபையில் ஒரு ஸ்தானம் அளிப்பது, மீன் தொழில் பயிற்சிப் பள்ளிக்கூடம் ஆரம்பிப்பது, ஜனத்தொகை விகிதத்தில் உத்தியோகம் அளிப்பது முதலியன நாம் வற்புறுத்திக் கேட்பவைகளில் சிலவாகும். இவைகளையும் அடைவதற்கு நம்மை நாம் தயார்செய்து கொள்வதோடு அவைகளை அடைய ஒற்றுமையாய் முழு மூச்சோடு பாடுபடவேண்டும். எல்லோரும் எல்லாப் பயனையும் சமமாக அனுபவிக்கவேண்டும் என்ற எண்ணம் நமக்கு இருக்குமானால் மேற்சொன்ன முறைகளைக் கைக்கொள்வது மிகவும் நல்லதொன்றாகும்.

சமீபத்தில் அரசியலாரிடமிருந்து எல்லா மீனவர் கூட்டுறவு சங்கத்திற்கும் அறிக்கை வந்துள்ளது. அதில் இரண்டாவது 5 ஆண்டு திட்டத்தில் 2.54 லக்ஷம் ரூ. நமக்கு வீடு கட்டுவதற்காக ஒதுக்கியுள்ளதாகவும், ஆண்டு ஒன்றுக்கு 102 வீடு கட்டித்தருவதாகவும், சொந்த மனையிருந்தால் 300 ரூபாய் வீடு கட்டிக்கொள்ப

வர் கொடுப்பதென்றும் மீன் இலாக்கா ரூ. 500 இனமாகக்கொடுப்பதென்றும் அதற்கான மனு 20-7-57-க்குள் அனுப்பிவைப்பதென்றும் காணப்பட்டுள்ளது. இதற்காக எந்த ஊரிலிருந்து யார் யார் மனு அனுப்பிவைத்தார்கள் என்றும் யாரார் பயனடையப் போகிறார்கள் என்றும் தெரியாது.

நிற்க, இனி நமக்குக்கிடைக்க இருக்கும் நன்மைகளில் பல விஷயங்கள் மீன் தொழில்வள ஆலோசனை போர்டின் சிபார்சுகளால் தான் நடைபெறவேண்டும் என்பதை அறியவேண்டும். அதற்குத் தகுந்தபடி ராஜ்ய மீனவர் கூட்டுறவு சங்க சம்மேளனமும், ராஜ்ய பருவதராஜகுல சங்கமும் இணைந்து வழிகாட்ட வேண்டியது மிகவும் முக்கியமானதாகும்.

சமூகத்தில் படித்த பட்டம்பெற்ற நல்ல உத்தியோகத்தில் உள்ள—அரசியலில் ஈடுபட்டுள்ள-செல்வாக்குள்ள—வாலிபர்கள் பலர் ஒதுங்கியிருப்பது குறித்து மிகவும் வருந்தவேண்டியதாய் இருக்கிறது. அவர்கள் அம்மாதிரி இருப்பதற்குக் காரணம் என்னவென்பதை உணரமுடியாமலே இருக்கின்றது. சமூகத்திற்கு வழிகாட்ட வேண்டியவர்களும்-சமூக நலனுக்குப் பாடுபட வேண்டியவர்களும்—சமூகத்திலுள்ள உயர்ந்தவர்களை வலைவீசித் தேடுபவர்களும்-தண்ணீரை நீக்கிப் பாலைமட்டும் பருகும் அன்னப் பட்சியைப்போல கெட்டதை ஒதுக்கி நல்லதை ஆராயும் பண்புடையவர்களுமாகிய அவ்வாலிபர்கள் சமூகத்தின் மூலமோ சொந்த முயற்சியிலோ முன்னுக்கு வந்தவர்களாயிருந்தாலும் தம் சமூகச் சூழ்நிலையைச் சிறிதும் சிந்தியாமல் இருப்பது இச்சமூகத்தின் சாபக்கேடோ என்னவோ என்பதை அறியமுடியாமல் இருக்கின்றது. அவர்கள் சமூகத்திலிருந்து தனித்து தங்களைப்போன்ற படித்தவர்களின் கூட்டுறவால் தனி சமூதாயத்தைப் படைக்க முற்பட்டுச் செயலாற்றுகின்றார்கள். சமூக நலனுக்கு இவர்கள் இருந்தும் இல்லாதவர்களாகவே பிறருக்குக் காணப்படுகின்றார்கள். உள்ளபடியே ஒரு சமூகமோ நாடோ முற்போக்கடைய வேண்டுமானால் அது வாலிபர்களின் தீவிர முயற்சியால்தான் ஆகவேண்டும். சமூகத்திற்குத் தூண்போன்றவர்கள் படித்த வாலிபர்கள். அவர்கள் இல்லாமல் எந்தக் காரியமும் வெகு சுலபமாகமுடியாது. இவ்வளவும் நன்கு உணர்ந்தவர்கள்தாம் அவர்கள். அறிந்தும் சமூக இழிநிலையில் கால்வைக்க அஞ்சுகிறார்கள். மானபிமானமோ-சொந்தக் கௌரவமோ—செல்வாக்கோ இன்னும் ஏதேனும் ஒன்று குறுக்கிட்டாலும் பொதுநலத்திற்குப் பாடுபடமுடியாது. இத்தகைய நிலையில் தான் வாலிபர்கள் உள்ளார்கள் என்று சொல்வது தவறாகாது என நம்புகின்றேன். உண்மையிருப்பின் சிறிது சிந்திக்கும் சக்தியைப் பயன்படுத்தி ஆவனசெய்யட்டும். பிழை யிருப்பின் பொறுத்துக்கொள்ளட்டும்.

நீங்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து சமூக நலனுக்கு ஆகவேண்டிய எல்லாக் காரியங்களையும் சிந்தித்து ஒத்துழைத்து ஏதோ சில

நன்மைகளாவது கிடைப்பதற்கு வேண்டியபடி ஆதரவு காட்டும்படி உங்களைப் பெரிதும் வேண்டிக்கொள்ளுகின்றனம்.

நம்மவர்கள் உள்ள ஒவ்வொரு இடங்களிலும் சமூக சங்கங்களும் கூட்டுறவு சங்கங்களும் ஆரம்பிப்பதற்கு முழுமூச்சாக வேலைசெய்யவேண்டும். கட்டாயம் ஆரம்பிக்க வேண்டும். அவைகள் இல்லாமல் நாம் முற்போக்கு அடையமுடியாது. மற்ற இனத்தவர்களைவிட நம்மவர்கள் ஒற்றுமையில் மிகுந்தவர்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆனால் அது நல்லவழியில் திருப்பப்படாமல் சீரழிந்து இருக்கிறது. ஒவ்வொரு கிராமங்களிலும் கூட்டம் கூடுவது, பணம் வசூலிப்பது, பணத்தை வட்டிக்குவிடுவது, ஊரில் சமூகத்தவர்களுக்குள் நேரும் சண்டை சச்சரவுகளை விசாரிப்பது, தவறாமல் உற்சவங்களைச் செய்துவருவது இவைகளோடுமட்டும் நின்றுவிடுகின்றது.

அவர்கள் அக்கூட்டங்களை மாற்றி அமைத்து, கல்வி, சுகாதாரம், வீட்டு வசதி, மார்க்கெட் வசதி முதலியவைகளுக்கும் பாடுபட திருப்பிவிடவேண்டியது படித்த வாலிபர்களுடையவும் தலைவர்களுடையவும் கடமைகளில் ஒன்றாகக் கருதவேண்டும்.

ஹரிஜனங்களில் சிலர் உயர்நிலையில் இருந்தாலும் பெரும்பாலானவர்கள் இழி நிலையில் இருப்பதால் அவர்கள் உயர்ந்தவர்களாகக் கருதப்படாமல் எவ்வளவு கூக்குரல் இடுகிறார்கள் என்பதையும் யாவரும் அதை உணர்கிறார்கள் என்பதையும் நாம் அறிவோம். அதுபோலவே நம்மினத்தில் இரண்டொருவர் அத்திபூத்ததுபோல் இருந்தால் குடத்துக்குள் விளக்குபோல் மறைந்திருப்பதாகவே தோன்றுகின்றது.

ஆகையால், பெரியவர்களும் தலைவர்களும் படித்த வாலிபர்களும் முன்னுக்குவந்து சமூக நலனுக்கான விஷயங்களில் சிறிது அக்கரைகாட்டி ஆவனசெய்ய கேட்டுக்கொள்ளுகின்றனம். எல்லாம்வல்ல இறைவன் நமக்கு அருள்புரிவாராக.

நாம் ஒற்றுமையாக அடிக்கடி சந்திக்கவும், கவர்ன்மெண்டு, மீன் இலாகா மற்றும் அதிகாரிகள் வருவதற்கு சவுகரியமாயிருக்கவும், வெளியூர்களில் இருந்து நம் குலமக்கள் சென்னையில் தங்க வசதி இல்லாது கஷ்டப்படுவதை நீக்கவும், இங்கு ஒரு பொதுவிடுதி அமைத்து அதில் சங்க நிர்வாகங்களை ஏற்படுத்தி பல முன்னேற்றங்கள் காணவேண்டி இருப்பதால், நம் குலாபிமானிகள் யாவரும் சிறுதுளி பெருவெள்ளமென, இயன்ற அளவு பொருளுதவிசெய்தால் சீக்கிரமே சென்னையில் சங்கத்திற்கென ஓர் விடுதி வாங்கலாமென்று உத்தேசித்திருப்பதாலும், அன்பர்களின் வேண்டுகோளின்படி ஆவணி மாதம் முதல் வெளியூர்களுக்குக் " கட்டிட நிதி " திரட்ட முன் ஏற்படுத்திய கமிட்டியார் வருவதாலும், குலாபிமானிகள் கூடியவரையில் பொருளுதவிபுரிந்து பூர்த்தி செய்விக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம். (ஆசிரியர்.)

பெண் பார்த்தல்

தமிழ்ப்புலவர் சிவ. முருகசிவம்
(75, நைனியப்பன் தெரு, சென்னை-1)

இன்ப வாழ்க்கைக்குப் பெண்ணைப் பார்த்துத் திருமணம் செய்து கொள்ளவேண்டும். பழைமையாகப் பெண்ணைப் பார்ப்பதுதான் வழக்கம். ஆனல் இப்போது பிள்ளையையும் பார்க்கிருர்கள். பார்க்கவேண்டியதும் அவசியமாகத்தானிருக்கிறது. பெண்ணைப் பார்ப்பதற்கு அவரவர்கள் குடும்பத்தில் வயது முதிர்ந்தவர்கள், அநுபவமுள்ளவர்கள், சாமுத்திரிகா லட்சணம் தெரிந்தவர்கள் நான்கு அல்லது ஐந்து பெரியவர்கள் சேர்ந்துகொண்டு குறிப்பிட்ட இடத்திற்குச் செல்வார்கள். அவர்கள் செல்லுவதற்கு முன்பே பிள்ளையைப்பார்த்து அவன் குணங்களையும் லடசணங்களையும் நன்ருக மனத்திலே பதியவைத்துக்கொண்டு புறப்படுவார்கள்.

எந்த வீட்டிற்குச் சென்ருர்களோ அந்த வீட்டுப்பெண் குறிப்பாலுணர்ந்து வெளியே வராமல் இவர்கள் கண்ணுக்குத் தென்படாமல் இருந்துவிடும். வந்தவர்கள் குலம் கோத்திரம் எல்லாம் பேசிவிட்டு, தாயைத் தண்ணீர் துறையிலே பார்த்தால் மகளை வீட்டிலேபார்க்கத் தேவையில்லை என்ற பழமொழிப்படி தாயாரைப்பார்த்து, மகள் இப்படித்தான் இருக்குமென்று தீர்மானித்து ஒப்புக் கொண்டதுபோல் பருப்புச் சோறுங்கூட சாப்பிட்டு விடுவார்கள்.

அதிலே ஒருவர் சொல்லுவார் என்ன இருந்தாலும் பெண்ணைப் பார்க்காமல் எப்படிப் போவது? பிள்ளை கேட்டால் என்ன சொல்லுவது? பெண் கருப்பா? சிவப்பா? உயரமா? குள்ளமா? கனமா? ஒல்லியா? என்பதையாகிலும் சொல்லவேண்டாமா? சாப்பிட்டாகிவிட்டது சுண்ணும்பு தேவையென்று கேட்போம் என்று ஒருவர் அடி எடுத்துக்கொடுப்பார்.

அப்படியே எல்லோரும் சேர்ந்துகொண்டு சுண்ணும்பு எடுத்து வரும்படி, பருவமடைந்து விவாகத்திற்குப் பக்குவமாக இருக்கும் அந்தப் பெண்ணுக்கு ஆணையிடுவார்கள். அப்போது எவ்வளவு வெட்கப்பட்டாலும் தாய் முதல் எல்லோரும் சொல்ல என்ன செய்யும் பாவம் கொண்டுதான்வரும். சுண்ணும்பு இருக்கும் பல்லாவில் கையைவிட்டு எடுத்து எடுத்துவருவதும் அங்கு வீற்றிருக்கும் அத்தனைபேருக்கும் சரியாகும்படி கொண்டுவருவதும்தெரியும். நீரில் இருக்கிறது சீர், சுண்ணும்பிலிருக்கிறது துப்பு என்று ஒரு பழமொழியுள்ளது. அப்படிச் சுண்ணும்பு எடுத்து வருவதையும் விரலின் லட்சணத்தையும் பார்த்து, அந்தப் பிள்ளைக்கு இந்தப் பெண் பிடிக்கும்பிடிக்காது என்றுசொல்லிவிடுவார்கள். முன் இதழ்களில் குறிப்பிட்ட கொட்டைக்கரத்தி நன்ருகப்புலப்படும். இதற்

காகவே பெண்ணைக் குடிக்க நீர் கொண்டுவரச் சொல்வது, சுண்ணும்பு கொண்டுவரச் சொல்வது என்ற வழக்கம் இருந்து வருகிறது.

ஆகவே, பெண்ணைப் பார்ப்பதில் எத்தனையோ விதங்கள் இருக்கின்றன. ஜாதகப் பொருத்தம் தவிர பேசும்போதும், குளிக்கும்போதும். சாப்பிடும்போதும் பார்ப்பது இருக்கிறது. பெண்ணைப் பார்ப்பதுபோல் பிள்ளையை ஏன் பார்க்கக்கூடாது என்று தோன்றலாம். பிள்ளை வெளியே திரிகிறுன். அவனைப்பற்றி மிகச் சுலபமாக எதையும் தெரிந்துகொள்ளலாம். ஆகையால், பிள்ளையைப் பார்ப்பதென்பது கணக்கிற்கு வரவில்லை.

மேலும், பெண்ணைப் பார்த்த உடனே நிச்சயமும் செய்து கொள்ளவேண்டும். பெண்ணைப் பார்த்த பிறகு நிச்சயம்செய்வது அவசியம்தானு? என்றும் அது அவசியமில்லாத செலவுகளென்றும் ஒரு சிலர் நினைக்கிருர்கள். நிச்சயம் செய்த பிறகு தான் திருமணத்திற்கு ஊக்கமும் தோன்றுகிறது.

ஏன் நிச்சயம் செய்துகொள்ள வேண்டுமென்ருல் பெண்ணுக்கு ஒருவர் போய் கேட்டபிறகு சொந்தக்காரர்களுக்கு அதன் பிறகு தான் உணர்ச்சிவரும். அப்போது அதற்குப் பற்பல தடைகளைச் செய்வார்கள். அல்லது கிடைத்த மாப்பிள்ளை வீட்டைவிட இன்னும் உயர்ந்ததாகக் கிடைக்கும் பட்சத்தில் பெண் வீட்டார் மாறுவதற்கும் இடமுண்டு. அவர்களும் சும்மாத்தானே பார்த்தார்கள், நிச்சயம் செய்யவில்லையே என்பார்கள். மற்றவர்களும் அது பற்றி கவலை என்ன இருக்கிறது என்றுகூறி எல்லோரும் முடிவு செய்து விடுவார்கள்.

பணத்தைப் பெரிதாக நினைப்பதே இக்காலத்துச் செயலாகும். நமது முன்னேர்கள் பெண் பார்த்துப்பேசிய பிறகு என்ன நிகழ்ந்தாலும் வாக்குறுதி மாறுவதில்லை. சும்மா குறிப்பிட்டுப் பேசிய புருஷன் தவறினதும், சொற்களே போதுமானதென்று திருநாவுக்கரசர் தமக்கையார் திலகவதியார் சரித்திரம் நன்கு நமக்கு வெளிப்படுத்தும். திருஞானசம்பந்தப் பெருமான் திருமணம் செய்து வைத்த வணிக மாதின் திருமணமும் எடுத்துக்காட்டும்.

இதுபோன்ற பல நிகழ்ச்சிகள் நேர்வதால் நிச்சயம் செய்வது என்று ஏற்பட்டது. அன்றியும், பிள்ளை வீட்டார் பெண்ணைப் பார்த்தபிறகு சில சௌக்கியக் குறைவு ஏற்பட்டால் கலியாண விஷயமே மறந்துவிடுவார்கள். அது தெரியாமையால் பெண் வீட்டார் அதனை நம்பி கெட்டுவிடுகிருர்கள். நிச்சயத்திற்குத் தேவையான நகையும் புடவையும் கொடுத்துவிட்டால் பாதி திருமணம் முடிந்தாற்போல் ஏற்பட்டுவிடுகிறது. ஆகவே, நிச்சயம் அவசியம் செய்வது நல்லதென்று இத்துடன் நிறுத்துகிறேன்.

——(o)——

கருங்குழி. திரு எ. குப்புசாமி நாட்டார்

தோற்றம்: 10–1873. மறைவு: 23—7—1957.

'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்னும் பொய்யா மொழிக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய இவர் ஓர் எளிய குடும்பத்தில் எல்லப்ப நாட்டாருக்கும் பச்சையம்மாளுக்கும் ஆறுவது குமாரராய்த் தோன்றி தன் முயற்சியாலும் தம் சகோதரர்களின் ஒற்றுமையாலும் பெரியார்களின் நட்பாலும் படிப்படியாக உயர்ந்த நிலைக்கு வந்து சமூக மக்களாலும் பொது மக்களாலும் புகழத்தக்க நிலையில் வாழ்ந்து வந்தனர்.

கருங்குழியில் பெரியதனக்காரராகவும், சங்கத் தலைவராகவும், மீனவர் கூட்டுறவுசங்கத் தலைவராகவும் இருந்து அரும் பெருந் தொண்டாற்றியுள்ளார். சென்னையில் தமிழாசிரியராகவுள்ள வித்வான். நடேச நாட்டாரும், கருங்குழியில் ஆசிரியராகவுள்ள பக்கிரிசாமியும் இவரது இரு மைந்தராவர். அடக்கமும், இன்சொல்லும், வியவகாரத் தன்மையும் வாய்ந்த இவர் பொதுக் காரியங்களையும், கோயிற் காரியங்களையும், மற்றும் சமூக நன்மைக்கான அலுவல்களையும் முன்னின்று நடத்திவந்துள்ளார். இவரால் அவ்வூரிலுள்ள சமூக மக்கள் பெரிதும் நன்மையடைந்து வந்தனர். எல்லோராலும் புகழப்பட்ட இவர் சில மாதங்களாக நோயினால் வருந்தி 84-வது வயதில் தமது இல்லத்தில் 23–7–'57 செவ்வாய்க்கிழமை பகல் 2 மணிக்கு இறைவன் திருவடி அடைந்தார். இவரது ஆன்மா சாந்தி அடைவதாக.

23—7—1957-ல் இறை அருள் எய்திய எனது தந்தையார் கருங்குழி எ. குப்புசாமி நாட்டார் அவர்களது நீத்தார் வழிபாடு 7—8—1957 புதன்கிழமை காலை 7 மணிக்குக் கருங்குழியில் நடைபெறுவதால் யாவரும் வரும்படி வேண்டுகின்றனன்.

அன்பன்

K. நடேச நாட்டார்,

காரியதரிசி, சென்னை ராஜ்ய பருவதராஜகுல சங்கம்.

ஆசிரியர்க்குக் கடிதம்

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

காலை மணி 8 இருக்கும்; அலுவலகத்துக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தேன். "அஞ்சல்" என்ற குரலைக்கேட்டுத் திரும்பினேன். அருமைக் காதலி அஞ்சுகம் தன் ஐந்து விரல்களின் துணைகொண்டு நீண்ட அஞ்சல் ஒன்றை என்னிடம் நீட்டி, "என்ன அத்தான் அஞ்சல்" என்று கொஞ்சும் குரலில் கொஞ்சினாள். பாவம் படிக்கத் தெரியாத பாவையாதலால் என் பதிலுக்கு ஏங்கி நின்றாள். வாங்கிவந்த அஞ்சல் வர்த்தனி என்பதை அறிந்து அடைந்த ஆனந்தத்தில் பாக்கட்டில் கையைவிட்டு ரூபா ஒன்றை எடுத்து பதிலை எதிர்பார்த்தவளிடம் நீட்டி 'வாங்கிவந்த கைகளுக்கு வளையல் போட்டுக்கொள்' என்றேன். "ஏது என்றைக்கும் இல்லாத புதுமை" என்று குறும்புபேசி தன் எல்லுப்பூ பற்களைக் காட்டிமறைந்தாள். பதிலேதும் கூறமுடியாத நான் புத்தகத்தை நோக்கினேன்.

முகப்பில் முக்கண்ணேன் மனம் கொண்டவள் நேர்கொண்ட பார்வையும், நீல் கைசூலமும் நிமிர்ந்த சிங்கத்துடன் முப்புரம் எரித்த முக்கண்ணில் மேற்கண் சக்தியை உச்சிமீதேற்ற மலைமருங்கில் நிற்பதாக நான் கண்ட காட்சி என்னைப் பெரிதும் கவர்ந்தது. ஆனாலும் ' பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல கால வகையினனே " என்ற புரட்சி பொன்மொழி என் மனம்விட்டு வனம் சென்றுவிடவில்லை.

மாதா மலைமருங்கைவிட்டு மக்கள் மத்தியில் மதம், மடமை, மற்றைய பிற்போக்கு சக்தியாவையும் அழித்து, அறிவையும், பொருளையும் தம்மக்கட்கு ஈந்து, இன்பவாழ்க்கை மலரச்செய்தற்கு மாகாளி புறப்பட்டுவிட்டாள் என்ற மகத்துவத்தைக் கொண்டு தங்கள் திங்கள் இதழ் தாங்கி வருவதாகக் கருதுகின்றேன்.

அடுத்த ஏட்டிலே அவள் நிலைகண்டு கவலை தெரிவித்துள்ளீர்கள். அக்கவலை பெரிதும் போக்குதற்குரியதே. அதற்கென தற்போதைய சந்தாதாரர்களும் தங்கள் சந்தாத் தொகையை உடனே அனுப்பிவைப்பதுடன் கூடப்பழகும் இன அன்பர்களுக்கும், மற்றவர்களுக்கும் நிலைமையை விளக்கி உறுப்பினராகச் சேர்தற்கு ழைக்கவேண்டியது ஒவ்வொருவருடைய தலையாய கடமை கும். அன்றியும் செய்யும் தொழில் அனைத்தும் அத்தகு ழிலுக்கேற்ப விளம்பரம் வேண்டும் என்பது மறுப்பிற் யது அல்ல. ஆதலின், அனைவரும் அவரவர் செய்யும் தொழி ன் சிறப்பிற்கேற்ப விளம்பரம்தந்து வர்த்தனி வலம் வருவதில் ங்குகொள்ள வேண்டுகின்றேன்.

பத்திரிகை சிறந்த முறையில் விளங்கவேண்டுமாயின் பத்திரிகையின் ஆசிரியர் அறிவில் சிறந்தும், ஆண்மையில் நிகரில்லாமலும்,

காலத்திற்கேற்ற முறையில் கருத்துக்குவியல்களைக் கணக்கற்ற முறையிலே மக்கள் மனதில் தன் ஏடு மூலம் பதியச் செய்பவராகவும், எதையும் தாங்கும் இதயம்படைத்த வெளியீடு செய்பவராகவும் தேவை. அத்தகு முறையில் தாங்கள் இப் பணியையும் ஒரு பணியாக ஏற்று திருப்பணி புரிவது எங்கள்பால் கொண்டுள்ள மதிப்பை அதிகரிக்கின்றது. அப்பணிமட்டுமின்றி எப்பணியிலும் சிறந்து எல்லையில்லா இன்பத்துடன் இனிதுவாழ வர்த்தனியும் மலிவுடன் பொலிவுபெற்று பவனி வருவாளாக.

வணக்கம்

"எழிலன்".

சொல்லில் பல விதம்

திரு. R. சுப்பிரமணியம், B.A., (Hons)

மக்களின் அன்றாட பேச்சுவாக்கில் வழங்கும் சொல்லின் பல பிரிவுகளைக் கூறுவதும், அவற்றின் நன்மை தீமைகளை ஆராய்வதும் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இன்சொல் : இது மனத்தின் கண் உவகையை வெளிப்படுத்துவதாக அமையும். அன்போடு கலந்து வஞ்சனையில்லாததாக இருக்கும். 'கடுகடுத் தாயிரஞ் செய்குவதில் இன்சொலாற் களி கொண்டழைத்தல் நன்று'. பொருள்களைத் தந்து உதவ முடியாவிடினும், முகமலர்ச்சியுடன் இன்சொல் கூறுபவனாகவாவது இருக்கவேண்டும். இன்சொல் கூறுவதே அறம் என்பதை

முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானும்
இன்சொலினதே அறம்

என்ற குறளால் அறியலாம். பிறர்க்கு நன்மை உண்டாக்குகின்ற சொற்களை மனத்தினால் ஆராய்ந்து இனியவாக எடுத்துக்கூறினால் பாவங்கள் குறையும்; அறம் பெருகும். வாய்மைக் குடிக்கு இன்சொல் வகையென்று அறிஞர்கள் கூறுவார்கள். சந்திரனது தோற்றத்தினால் கடல் பொங்குவது போன்று, இவ்வுலகம் இன்சொல்லால் மகிழ்கின்றது. மற்றவர்களிடம் நாம் சில சந்தர்ப்பங்களில் சென்றாலும், அவர்கள் கூறும் முறைமையினால் நாம் காரியத்தைச் சாதிக்க முடியாவிடினும், அவர்களது இன் சொல்லினால் அவர்களுக்கு 'வாய் வாழைப்பழம் கை கருணைக்கிழங்கு' என்று மனத்திற்குச் சமாதானம் கூறிக்கொள்கின்றோம்.

வன்சொல் : இன்சொல்லிற்கு இது எதிர்ச்சொல் என்பதை அறிவீர்கள். இது கடுஞ்சொல் எனவும் வழங்கப்படும். கடுஞ்சொல்லை விரும்புவது பழத்தை வெறுத்து காயை விரும்புவது போன்றதாகும். தனிப்பட்ட யாராவது திட்டுவதின் மூலம்

மாபெரும் காரியத்தைச் சாதிப்பதாக சிலர் நினைக்கிறார்களல்லவா? அந்த மாதிரி சிறுபிள்ளைக் கோபத்தில் எழும் கூற்றுக்களும் இதன்பாற் படுவனவாகும். மிகவும் தீமை விளைவிக்கக் கூடியது. தீயினாற்சுட்ட புண் குணமாகும்; ஆனால், கடுஞ்சொல்லினால் ஏற்பட்ட வடு மாறாது.

கடிந்துரைக்குஞ் சொல்: தவறான நெறியிலே ஒருவன் சென்றால், அவனை இன்சொல்லைக்கொண்டு தடுக்கமுடியாது. அவ்வமயங்களில் இச்சொல் பயன்பெறும். தவறு கண்டவிடத்து, அரசனை அஞ்சாது இடித்துரைக்கும் அமைச்சர்களைக் கொண்ட அரசனுக்குக் கேடில்லை. ஆனால் இவ்வாறு இடித்துரைப்பாரையில்லாத அரசன் பாகன் இல்லாத யானைபோல், நெறி தவறி கெட்டழிவான். இதனை,

இடிப்பாரை யில்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்

என்ற வள்ளுவர்மொழியால் அறியலாம். ஏன்? இராமாயணத்தை எடுத்துக்கொள்ளுங்களேன். இராவணன் அழிவுக்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றில் ஒன்று அவன் அமைச்சர்கள் இது செய்யத்தகுவது, இது செய்யத் தகாதது என்று இடித்துக்கூறாது, அவன் நினைத்தபடியே அவர்களும் நினைத்து இராவணன் விருப்பப்படியே நடந்தார்கள். இதையே சீதை வாயிலாகக் கமபர் கூறுகின்றார்,

அடுக்குமீ தடாதென்று ஆன்ற
ஏதுவோடு அறிவு காட்டி
இடிக்குநர் இல்லை; உள்ளார்
எண்ணிய தெண்ணி உன்னை
முடிக்குனர்......................

இடித்துரைக்காமல் ஒருவர் விருப்பப்படி நடக்க இதமாகக் கூறும் சொல்லை 'அடுத்துக் கெடுக்குஞ் சொல்' என்றும் கூறலாம். உதாரணமாக, பாரதத்தில் சகுனி, தன் தம்பிமாரைக் கொன்ற துரியோதனனை இம்முறையாலே கெடுக்கின்றான். இதனாற்றான் 'கொல்லைக்குப் பல்லி, குடிக்குச் சகுனி' என்ற கூற்றும் எழுந்ததுபோலும்!

வாய்மை (உண்மைச் சொல்): பிற உயிர்க்குத் தீங்கு சிறிதும் பயவாத சொல்லே வாய்மைச் சொல்லாகும். இது சால்பினைத் தாங்கும் ஐந்து தூண்களாகிய அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம் வாய்மை ஆகியவைகளுள் ஒன்று. உடம்பினது தூய தன்மை நீராலே உண்டாதல்போன்று, மனத்தினது தூய தன்மை வாய்மையால் உண்டாவதாகும். "கோடானுகோடி கொடுப்பினும் தன்னுடைய நாக்கோணாமை கோடிபெறும்." மனத்துடன் பொருந்திய உண்மைச் சொல்லைச் சொல்வானாயின், அவன் தானமும் தவமும் ஒருங்கு செய்பவனினும் சிறந்தவனாவான். அதைப்போன்று சிறந்த

புகழில்லை. எல்லா அறங்களையும் அதுதரும். உண்மையைக் கைக்கொண்டவன் மக்கள் மனத்தில் என்றும் நிலைபெற்றிருப்பான். சிறந்தனவாக வள்ளுவர் கூறும் இரண்டனுள் இது ஒன்றாகும் என்பதைக் கீழ்க்காணும் குறளில் உணரலாம்.

ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று

ஆகவே உயர்ந்த குடியிற் பிறந்தார் வாய்மை, மற்ற ஒழுக்கங்கள், நாண் என்ற பண்புகளிலிருந்து வழுவமாட்டார்கள்.

பொய்ம்மை: வாய்மையின் எதிர்ச்சொல்.

புறங்கூறுஞ் சொல்: இது பிறர் காணாத வழி இகழ்ந்துரைக்கும் சொல். இதை விரும்புவது, நல்ல பூந்தோட்டத்தில் பூக்களின் தேனைவிடுத்து, காக்கை வேப்பம்பழத்தை விரும்புவதை ஒத்ததாகும். ஒருவன் எதிரே அவனைப்பற்றி தாட்சண்யமின்றிக் கூறினாலும் கூறலாம். ஆனால், அவனில்லாதபோது இகழ்ந்து அவனைக் கூறவேகூடாது. இதை உடையவன் பூமிக்குப் பெருஞ்சுமையாவான் ஒருவன் அறத்தைச் செய்யாது பாவங்களைச் செய்தாலும், புறங்கூறமாட்டான் என்று உலகத்தாரால் கூறப்பட்டால் அதுவே நல்லது. இதனால்தான் பிறர் தீமை சொல்லா நலத்ததே சால்பு என்பர்.

பயனில்லாத சொல்: தமக்கும் பிறர்க்கும் அறம், பொருள், இன்பமாகிய பயன்களுள் ஒன்றும் பயலாத சொல் இச்சொல்லாகும். இச்சொல், இதனை உடையானை நீதியின்பாற் படாதவன் என்று காட்டிவிடும். அவனிடம் உள்ள சீர்மையும், சிறப்பும் நீங்கும். வள்ளுவர் இந்தப் பயனில்லாத சொல்லை உடையவனை மக்களில் பதர் என்று கூறுவர்.

மேற்கூறியவைகளினால், நிலத்தின் இயல்பை அதன்கண் முளைத்த முளை காட்டுவது போன்று, ஒருவன் எத்தன்மையன் என்பதை அவன் வாயில் தோன்றும் சொல் கூறிவிடும். மக்கள் மனம், மொழி, மெய் என்பவற்றின் வாயிலாக இழைக்கும் பத்துக் குற்றங்களில் நான்கு குற்றங்கள் சொல்லினாலேயே ஏற்படுகின்றன என்பதை

பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில்
சொல் எனச் சொல்லின் தோன்றிவை நான்கும்
(குறளை—புறங்கூறல்)

என்ற மணிமேகலை அடிகளால் அறியலாம்.

இறுதியாக குழலின் ஒலியையும், யாழின் ஒலியையும்விட இனிதான குழந்தைகளின் மழலைச் சொல்லும்; மகளிரின் அழகை விவரிப்பவைகளில் ஒன்றாகும் பைங்கிளிக் கிளவியும்; கல்லாதவனைக் கற்றவனென்றும், காடேறித்திரிவானை நாடாள்பவனென்றும்,

பொல்லாதவனை நல்லவனென்றும், போர்முகத்துக் கோழையை புலிபோன்றவனென்றும் புகழும் 'முகஸ்துதிச் சொல்லும்;'

'இன்றுணை மகளிர்க் கின்றியமையாக்
கற்புக் கடம் பூண்ட வித்தெய்வமல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண்டிலமால்'

என்று கண்ணகியின் மாண்பைக் கவுந்தியடிகளார் கூறும் செஞ் சொல்லும்; பாரதியார் பாப்பாவைப் பார்த்து

'உயிர்களிடத்தில் அன்பு வேணும்—தெய்வம்
உண்மை யென்று தானறிதல் வேணும்;
வயிர முடைய நெஞ்சு வேணும்—இது
வாழும் முறையடி பாப்பா'.

என்று கூறும் 'நீதிச் சொல்லும்' இன்னோரன்ன பிறவும் கற்றவரும் மற்றவரும் சிந்தித்து இன்புறற்பாலனவாம்.

——(o)——

குழந்தை ஒரு தொல்லை?

"தென் குமரன்"

"குழந்தை ஒரு தொல்லையா? 'குழலினிது யாழினிது என்ப தம் மக்கள் மழலைச்சொல் கேளாதவர்' என்று வள்ளுவத்தேவர் கூறியிருக்கிறாரே! குழந்தை ஒரு இன்பப்புதையல்; அதுதான் வாழ்க்கையின் உயிர்நாடி என்று அழுத்திச் சொல்ல ஒரு அதிகாரமே பாடியிருக்கிறாரே! அப்படியிருக்க, குழந்தை ஒரு தொல்லையா?" என்று என்னை யாரும் கேட்டுவிடாதீர்கள் இப்போது!

முன்பெல்லாம், எனக்குத் திருமணம் ஆவதற்கு முன்பெல்லாம், 'குழந்தைகளை நாம் பெற்றுக் கொள்ளக்கூடாது; குழந்தைகள் பிறந்தால் கணவரின் அன்பு அவைகள் பக்கம் திரும்பிவிடும்; பிறகு என் வாழ்வில் உல்லாசம் இருக்காது; கணவரின் அன்புமொழிகளைக் கேட்கமுடியாது; குழந்தைகளின் அழுகுரலைத்தான் கேட்கமுடியும்; கணவரின் கோபத்திற்குத்தான் அடிக்கடி ...ளாகவேண்டும்' என்றெல்லாம் எண்ணியிருந்தேன்.

...பிறகு திருமணமாகி ஓராண்டுவரை கணவரின் அன்புமழை...ல திளைத்திருந்தேன்; அவர் தந்த இன்பவெள்ளத்தில் அமிழ்ந்...நந்தேன். அப்போது பிறக்கப்போகும் குழந்தையின் நினைவு ...டிக்கடி வரும்; என் கண்கள் கலங்கும்! 'குழந்தை பிறந்து ...ட்டால்......? இருக்கும் இன்பம் செத்துவிடுமே; அமைதி அழிந்துவிடுமே! என் இளமையும் அழகும் பாழ்பட்டுவிட்டால்.......?' தெளிவு பெறாத என்னுள்ளம் இப்படிக் கேட்கும்! உடன் என்னுடல் நடுங்கும்!

எங்கள் வீட்டு எதிர் வீட்டார்க்கு ஒரே ஒரு குழந்தை. அந்தக் குழந்தையின் பொருட்டு மனைவி, கணவனின் வெறுப்புக்கு ஆளாவதை அடிக்கடி நான் பார்க்கும் வாய்ப்புகள் ஏற்படும்; அப்போதெல்லாம், 'குழந்தைகள் வேண்டாம்! எனக்குக் குழந்தைகளே வேண்டாம்!' என்று எண்ணுவேன் நான்!

இந்த எண்ணம் நாளுக்குநாள் வளர்ந்து, என்னையொரு மருத்துவர் மனைக்கே அழைத்துச் சென்றுவிட்டது! ஆம்; நான் என் கணவருக்குத் தெரியாமலேயே ஒரு டாக்டரின்' உதவியை நாடினேன்! அந்த 'டாக்டர் எதையோ தந்து, ஊசிபோட்டார். இந்தச் செய்தி என் கணவருக்குத் தெரியாது! கணவரை ஏமாற்றுகிறோம் என்ற எண்ணம் ஒரு புறம் வாட்டினாலும், குழந்தை இனி பிறக்காது என்ற எண்ணம் எனக்கு ஒருவித அமைதியைத் தந்தது; கணவரோடு நெருங்கி உறவாடினேன்!

திடீரென்று காலம் என்னைப் பார்த்துச் சிரித்துவிட்டது! என் எண்ணம் பாழானது; நான் தாய்மை அடைந்துவிட்டேன்! எல்லோரும் மகிழ்வுகொள்ள, நானோர் அழகிய ஆண் மகவுக்குத் தாயானேன்! உறவினர்களும் நண்பர்களும் வந்து வாழ்த்துரை வழங்கினர். எனக்கு 'மருந்து' தந்து 'ஊசி' போட்ட 'அந்த' டாக்டரும் வந்தார்!

"டாக்டர்! ......" நான் பேசமுடியாது தவித்தேன்.

"நீங்கள் என் நண்பரின் மனைவி என்று எனக்கு அப்போதே தெரியும். நான் உங்கள் திருமணத்திற்குக்கூட வந்திருந்தேனே! அன்று நான் உங்களுக்குக் கொடுத்தது 'மருந்து' அல்ல; 'டானிக்'. ஊசிபோட்டதுகூட இரத்த வோட்டத்தை விருத்தி செய்யத்தான்!"

டாக்டர் சிரித்துக்கொண்டே இப்படிப் பேசினார்! என் எண்ணம் தோற்றதைக் கண்டு வெட்கித் தலைகுனிந்தேன் நான்!

அன்றிலிருந்து என் வாழ்க்கையில் ஒரு திருப்பம்—எண்ணத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. குழந்தைகளை வெறுத்துவந்த என் பெண்ணுள்ளம் எனக்குப் பிறந்த செல்வத்தை எண்ணியெண்ணி மகிழ்ந்தது! எனக்குக்கிடைத்த பெரும்புதையல். என் உயிர், இந்த உலகம் எல்லாமே என் செல்வம்தான் என்ற மனநிலைக்கு வந்துவிட்டேன் நான்!

காலச் சுழற்சியிலே என் மகனுக்கு இரண்டாண்டுகள் நிரம்பின. என் சேயின் இளமைப் பொலிவு கண்டவர்களுக்குப் போதையூட்டியது; அவர்கள் மகிழ்ந்தார்கள்! நாங்களும் தான்; கள்ளுண்ட மந்திகளானோம்!

எங்கள் மகனை வாரியணைத்து முத்தமிடும் போதெல்லாம், எங்கள் உடலுக்குச் சொல்லவொண்ணாத இன்பம் ஏற்படுகிறது; உச்சி குளிர்கிறது! உலகப் புகழ்பெற்ற இசைவாணரின் இசை

யைவிட எங்கள் மகன் பேசும் முடிவுபெருத—பொருளில்லாத இன்பத் தமிழ் பேரின்பம் தருகிறது!

"மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர்
சொற்கேட்டல் இன்பஞ் செவிக்கு"

என்று வள்ளுவப் பெருந்தகை கூறுகிருரே, எவ்வளவு உண்மை!

எங்கள் மகன்தான் எங்கள் வாழ்க்கையின் சமாதானத் தூதுவன்! என் கணவருக்கும் எனக்கும் இடையே ஏற்படும் மனக் குறைகளை நிறைவு படுத்தும் ஆற்றல் படைத்தவன்! எங்கள் துயர்போக்கும் தூயமருந்து எங்கள் செல்வன்தான். எங்களுக்கு,

"மாசில் வீணையும் மாலை மதியமும்.
வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்!"

அதுவே, குழந்தை ஒரு தொல்லை என்று இப்போது நான் சொல்லத் தயாராய் இல்லை! 'ஒருத்தி பெறும் பேறுகளுள், அறிய வேண்டியவைகளை அறியும் நற்புதல்வர்களைப் பெறுவதைத் தவிர, வேறு பேறுகளை நான் மதிப்பதில்லை!' ஆம், பேறுகளுள் சிறந்த பேறு பிள்ளைப்பேறு தான்!

——(o)——

திருக்குறள்

வித்வான் K. N.

11-ம் அதிகாரம்

செய்ந்நன்றி யறிதல்.

அஃதாவது தனக்குப் பிறர்செய்த நன்றியை மறவாதிருத்தல், இனிய சொற்களைக்கூறி இல்லறத்தினின்று தவருதவர்களுக்குப் பிராயச்சித்தத்தாலும் போக்க முடியாத பாவம் பிறர்செய்த நன்றியை மறத்தலேயாதலால், அதனை (அதாவது பிறர்செய்த நன்றியை) மறவாமல் காக்க வேண்டும் என்பதற்காக இஃது இனியவைகூறல் என்ற அதிகாரத்தின்பின் வைக்கப்பட்டது.


திருவள்ளுவர்

1. தனக்கு முன்னேருதவியும் செய்யாதிருக்க ஒருவன் பிறனுக்குச் செய்த உதவிக்கு மண்ணுலகத்தையும் விண்ணுலகத்யும் ஈடாகக் கொடுத்தாலும் சமானமாதல் அரிது.

காரணத்தோடுதான் பிரதியுபகாரம் செய்வார்களாதலால்

காரணமில்லாத உபகாரத்திற்கு மண்ணுலகமும் விண்ணுலகமும் ஈடாகாது என்றார்.

'செய்யாமற் செய்த உதவி' என்ற பாடத்தைக் கொள்ளாமல், 'செய்யாமைச் செய்த உதவி' என்ற பாடத்தைக்கொண்டு 'பிரதி உபகாரம் செய்வதற்கு முடியாத ஏழைகளிடத்துச் செய்த உபகாரம்' என்று பொருள் கொள்வாரும் உளர்.

2. ஒருவனுக்கு முடிவுவந்த அளவிலே ஒருவன்செய்த உபகாரமானது அவன் தன்னுடைய கௌரவங்களைப்பார்க்கச் சிறிதாயிருந்ததாயினும் அக்காலத்தை நோக்க நிலவுலகத்தினும் மிகப் பெரிதாயிருக்கும்.

இதனால் உபகாரம்செய்த காலத்தைப் பார்க்க வேண்டுமேயல்லாமல் பொருள் சிறிது என்பதைப் பார்க்கலாகாது என்பதாம்.

3. தாம் செய்யும் உதவியைப் பெற்றுக்கொள்பவராலே பின்னால் தமக்கு வரும் பயனை ஆராயாமல்செய்த உதவியாகிய அன்புடைமையை ஆராய்ந்தால், அவ்வுதவியின் நலமானது கடலை விடப் பெரியதாம்.

இம்மூன்று செய்யுட்களாலும் முறையே காரணமில்லாமல் செய்த உபகாரமும், காலத்தில்செய்த உபகாரமும், பயன் கருதாது செய்த உபகாரமும் அளவிடமுடியாது எனக்கூறப்பட்டது.

4. தமக்குத் தினையளவதாகிய உபகாரத்தை ஒருவன் செய்தானாயினும் அதனைத் தினையளவதாக நினையாமல், அப்பயனை நினைத்து அறிபவர்கள் பனையளவதாக நினைப்பார்கள்.

நினைப்பின் பயனாவது அங்ஙனம் நினைப்பவர்க்கு உண்டாகும் பிரயோசனம்.

5. எதிர்செய்யும் உதவியானது காரணத்தாலும், பொருளாலும், காலத்தாலும் ஆகிய மூவகையாலும் முன்செய்த உதவியளவினது அன்று; அவ்வுதவி செய்யப் பெற்றுக்கொண்டவரது தகுதி அளவினதாம்.

அதாவது பிறர்செய்த உபகாரத்தை ஏற்றுக்கொண்டவர், அவர்செய்த உபகாரத்தினது காரணம், பொருள், காலம் என்பனவற்றிற்கு ஏற்பப் பிரதி உபகாரம் செய்யாது, தமது தகுதிக்கு ஏற்றவண்ணம் பிரதி உபகாரம் செய்தலாம்.

இதனால் உபகாரம் காரணமில்லாமல் செய்வதும், ஆபத்து நேர்ந்த காலத்தில் செய்வதும், பயனை எதிர்பாராது செய்வதும், பிறர்செய்த உதவிக்குத் தகுந்தபடி பிரதி உபகாரம் செய்யாது உதவிசெய்தவர் மனம் மகிழும்படி தமது தன்மைக்கு ஏற்றபடி பிரதி உபகாரம் செய்தலும் என நான்கு வகையாயிற்று.

காரணம் கருதியும், பொருள் கருதியும், காலம் கருதியும் செய்யும் உபகாரம் ஒரு பயனை நோக்கிச் செய்வதாகையால் அது சிறந்ததாகாது என்பதும் இதுவே பெரிதாமென்பதும் கூறப்பட்டது.

6. துன்பம் வந்த காலத்துத் தனக்கு உதவிசெய்தவரது சினேகத்தை விடாதிருக்கக்கடவன்; அறிவு ஒழுக்கங்களிற் குற்ற மில்லாதவரது சினேகத் தன்மையை மறவாதிருக்கக்கடவன்.

இப்பிறப்புக்கு உறுதி சொல்லவந்தவர் அதற்கு இனமாகிய மறுபிறப்புக்கும் உறுதி சொல்லினர்.

7. தம்மிடத்து உண்டாகிய துன்பத்தை நீக்கினவரது சினேகத்தினை வினைப்பயன் தொடரும் எழுமையினையுடைய எழு வகைப் பிறப்பிலும் நல்லோர் நினைப்பர்.

நினைத்தலாவது துன்பத்தை நீக்கிய வழி அவரிடத்துத் தோன்றுவதாகிய அன்பு, பிறப்புந்தோறும் தொடர்ந்து அன்புடை யராதல். இவை இரண்டு பாட்டாலும் நன்றி செய்தவரது நட்பை விடலாகாதென்பது சொல்லப்பட்டது.

8. ஒருவன் முன்செய்த நன்மையை மறப்பது ஒருவனுக்கு அறனல்ல; அவன் செய்த தீமையைச் செய்தபொழுதே மறப்பது அறமாம்.

இதனால் ஒருவன் நன்மையும் தீமையும் செய்தவிடத்து அவன் செய்த நன்மையை என்றும் மறவாமல் அவன் செய்த தீமையை அப்பொழுதே மறந்துவிடுவது நல்லது என்று கூறப்பட்டது.

9. தமக்கு முன்னொரு நன்மை செய்தவர் பின் கொன்றாற் போலும் வெறுக்கப்படும் காரியங்களைச் செய்தவராயினும் அவர் செய்த அந்நன்மை ஒன்றையும் நினைக்க அவையெல்லாம் இல்லையாம்.

தினையளவு செய்த நன்றியை பனையளவாகக் கொள்ளவேண்டு மாதலால் அது ஒன்றே கொன்றாற்போன்ற வெறுக்கப்படும் காரி யங்களையெல்லாம் கெடுக்கும் என்பதாம்.

10. எந்தப் பெரிய அறங்களைக் கெடுத்தவர்களுக்கும் அப் பாவத்தினின்றும் நீங்கும் வழி உண்டாம்; ஒருவன் செய்த உப காரத்தைக் கெடுத்த மனிதனுக்கு அப்பாவத்தினின்றும் நீங்கும் வழி இல்லை.

பெரிய அறங்களைக் கெடுத்தலாவது, பசுவின் முலையை அறுத் தல், பெண்களின் கருப்பத்தை அழித்தல், பிராமணர்களைக் கொல்லுதல் முதலிய பாதகங்களைச் செய்தல். இதனாலே செய்த நன்றியைக் கெடுத்தலின் கொடுமை சொல்லப்பட்டது.

——(o)——

வைத்தியம்

தமிழ்ப்புலவர், சிவ. முருகசிவம் அவர்கள்.
[75, நைனியப்பன் தெரு, சென்னை - 1.]

வைத்தியம் என்றவுடனே மருந்து சொல்லப்படுமென்றும் அந்த மருந்து மிக சுலபமாகக் கிடைக்கும் என்றும் அது கட்டியாகவோ மொத்தையாகவோ அல்லது லேபில் இட்ட புட்டியில் அடைத்தோ இருக்கும் என்றும் எண்ணுகிறார்கள்.

வள்ளுவர் தமது அழகிய திருக்குறளிலே மருந்து என்று ஒரு அதிகாரத்தை வகுத்துக்கொண்டு ஒரு மருந்தும் சொல்லாமல் கடைசி பத்தாவது குறளிலே மருந்து என்று முடிக்கின்றார்.

"உற்றவன் றீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்
றப்பானாற் கூற்றே மருந்து"

அதன் கருத்து என்ன என்று ஆராய்வோம் முதலிலே மருந்தை நான்காகப் பிரிக்கின்றார். அதாவது:

உற்றவன் நோயாளி, தீர்ப்பான்-வைத்தியன், மருந்து – நோயிற்குத் தகுந்த மருந்து, உழைச்செல்வான் —அதனைத் தப்பாமல் செய்பவன். இந்த நான்கையும் மருந்தாகக்கூறி இதில் ஒவ்வொன்றையும் நன்னான்காகப் பிரிக்கின்றார். உற்றவனாகிய நோயாளிக்கு நான்கு வகையாவது:—1. வைத்தியனுக்குப் பணங் கொடுக்கும் தகுதி. 2. மருத்துவர் வழி நிற்றல். 3. நோய் நிலையுணர்த்தும் வன்மை. 4. மருந்தின் துன்பம் பொறுத்துக்கொள்ளல்.

முதலாவது வைத்தியருக்குப் பொருள் கொடுக்காவிட்டால் எப்படி வைத்தியம்செய்வார்? நோயாளி சாப்பாட்டுக்கே கஷ்டம் என்றால் அவனுக்கு என்ன மருந்துகொடுப்பது? என்ன பத்தியம் சொல்லுவது? அவனும் எதைத்தான் செய்துகொள்ள முடியும். ஆகையால் பணச் சௌகரியம் முதலிலே இருக்கவேண்டும்.

இரண்டாவது, வைத்தியர் சொற்படி கேட்டு நடக்கவேண்டும். வைத்தியர் சொல்வது ஒன்று நோயாளி நடப்பது ஒன்றாக இருந்தால் நோய் குணமடையுமா? ஒரு பத்தியம் சொன்னால் கண்டதைச் சாப்பிட்டால் மருந்து பிடிக்குமா? ஆகையால் வைத்தியர் சொற்படி நோயாளி நடக்கவேண்டும்.

மூன்றாவது. நோயாளி தனக்கிருக்கும் நோயை விளக்கிச் சொல்லவேண்டும். மருந்து சாப்பிட்ட பிறகு இப்போது உடல் எப்படி இருக்கிறதென்றால் அப்படித்தான் இருக்கிறதென்று சொல்லுவானேயானால் வைத்தியர் என்ன புரிந்துகொள்ள முடியும்? உதாரணமாக வயிறு வலிக்கிறதா? மார்பை வலிக்கிறதா? என்றால் உடல் பூராவுங்காட்டி எல்லாம்தான் வலிக்கிறது என்று நோயின் விபரத்தை அறியாது சொன்னால் வைத்தியர் என்ன செய்யமுடியும்? ஆகவே நோயின் நிலையுணர்த்தும் வன்மை நோயாளிக்கு இருக்கவேண்டும்.

நான்காவது, மருந்தின் துன்பத்தைப் பொறுத்துக்கொள்ளுதல் வேண்டும். அதாவது மருந்து கசக்கும், துவர்க்கும், குமட்டும் அதனைச் சாப்பிட்டு அதனாலுண்டாம் துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளவேண்டும். மருந்தை வாந்தி செய்துவிட்டால் நோய் எப்படிக் குணமடையும்? ஆகவே மருந்தின் துன்பத்தைப் பொறுத்துக்கொள்ள வேண்டும்.

இந்த நான்கு வகையான குணங்களும் நோயாளியினிடத்திலே இருக்கவேண்டும். தீர்ப்பானாகிய வைத்தியருக்கு நான்கு வகையாவன: 1. நோய்கண்டு அஞ்சாமை. 2. முன்னோர் அல்லது ஆசிரியர்மாட்டு அடைந்த கல்வி. 3. நுண்ணறிவுடைமை அதாவது முன்னோர்களோடு பழகிவந்த அனுபவமிருத்தல். 4. மன மொழி மெய்களால் தூயவனாயிருத்தல்.

முதலாவது, நோயைக் கண்டதும் பயப்படாமல் அல்லது பயப்படச் செய்யாமல் இருக்கவேண்டும். வைத்தியர் இந்த நோய் தீராது என்றும், இந்த வியாதிபெருகி ஒரு பெரிய நோயாக முற்றி விடுமென்றும் நோயாளியிடத்திலே பயங்காட்டக் கூடாது.

ஆனால், இப்போது இருக்கும் சில வைத்தியர்கள் வருவாயை நோக்கி, பிணியாளனுக்கு இது T. B. என்றும் Cancer என்றும் பயப்படுத்திவிடுகிறார்கள்.

இரண்டாவது, வைத்தியருக்குப் பரம்பரையாகவோ அல்லது ஆசிரியரிடத்திலோ பழகிவந்த அநுபவம் இருக்கவேண்டும். அப்படிக்கின்றி பள்ளிப்படிப்போடு புது வைத்தியராக வருபவருக்கு அநுபவம் இருக்காது. ஆகையினால்தான் உன் உடம்புக்கு என்ன என்று நோயாளியைக்கேட்டுத் தெரிந்துகொள்ளுகிறார்கள்.

மூன்றாவது, பட்டம், பதவி படைத்தவர்கள் நோய் தீர்க்கும் வன்மையின்றி, கௌரவமாக நோயாளியின் வீட்டிற்குவந்து போய்க்கொண்டு இருந்தால் போதாது. இன்னாருக்கு இன்னின்ன வியாதியைத் தீர்த்தேன் என்று எடுத்துக்காட்டும் இயல்புடையவராக இருக்கவேண்டும்.

நான்காவது, வைத்தியன் மனதினால் தீய நினைப்பு எண்ணாமலும் வாக்கினால் கெட்ட வார்த்தைகளைப் பேசாமலும் தேகத்தி

ளுல் கொடுஞ்செயல்களொன்றும் செய்யாதவனுமாக இருக்க வேண்டும். விளக்கமாகக் கூறினல் வைத்தியருக்குக் கோபம், ஆசை, பொருமை, கடுஞ்சொல், திருடு, விபசாரம் முதலியன இல் லாமல் அமைந்திருக்க வேண்டும்.

மருந்து நான்கு வகையாகப் பிரிக்கப்படுவன :—1. பல பிணி களுக்கு ஏற்ற சுவை, வீரியம் விளைவு, ஆற்றல்களால் மேம்படுதல், 2. எளிதிலே கிடைக்கும் தன்மை. 3. வேறு நோய்களைக் கிளப்பா திருத்தல். 4. சரீர சுபாவத்தோடு பொருந்துதல். முதலாவது, பல பிணிகளுக்கேற்றதாக சுவை, வீரியம், விளைவு, ஆற்றல்பெற்று உருசி, காரச்சாரம், பாகம், நோயைத்தீர்க்கும் தன்மை முதலியன இருக்கவேண்டும்.

இரண்டாவது, மருந்து வகைகள் எளிதிலே கிடைக்கவேண் டும். நின்ருல் சுணங்கி, நிலப்புறண்டி, நத்தைச்சூரி, சந்திரகாந்தக் கொடி இவைகள் எவ்வளவு குணங்கள் செய்வதாயினும் கிடைக் காத பொருளைப்பற்றி நமக்குப் பிரயோசனமென்ன? மூன்ருவது, ஒரு நோய்க்காக ஒரு மருந்தைச் சாப்பிட்டால் அதுபோய் வேறு நோயை உண்டுபண்ணுதபடி இருக்கவேண்டும். ஜுரத்திற்கு ஊசி போட்டுக்கொண்டால் உடம்பெல்லாம் சொறி சிரங்கு வந்து விடுவதைப் பார்க்கின்ருேம்.

அப்படியே குடல் வியாதிக்குப் பல்லைப் பிடுங்குவதும், பல் பிடுங்கின தோஷத்தால் கண்ணுக்குக் கெடுதல் செய்வதும் கண் ணுக்குச் செய்யும் சஸ்திர சிகிச்சையால் மூளைக்குக் கெடுதலுண் டாகிப் பைத்தியம் பிடிப்பதும் இவைபோன்ற கெடுதிகள் நாட்டு வைத்தியர்கள் செய்யாவிட்டாலும் நாட்டு வைத்தியர்களைத் தூற்றுவது அதிகம்.

நான்காவது, மருந்து சரீர சுபாவத்தோடு பொருந்துதல் வேண்டும். ஒரே மருந்து ஒருவருக்குப் பிடிக்கும்; மற்றவர்களுக்குப் பிடிக்காது. தேக தத்துவத்தை அறிந்து முறை மாற்றி செய்வ தோடு இந்த நான்கு வகை பிரிவுகளும் மருந்தினத்திலே அமைந்து இருக்கவேண்டும்.

உழைச்செல்வான் — நோயாளியின் அருகிலே இருந்து பணி விடை செய்யும் நரசுக்கு நான்கு வகையாவன :

1. நோயாளியின் இடத்திலே அன்பு இருக்கவேண்டும்.
2. மனம் மொழி மெய்களால் தூயவனுக இருத்தல்.
3. வைத்தியர் சொல்லியபடியே செய்யும் வல்லமை.
4. அறிவுடையவனுக இருக்கவேண்டும்.

முதலாவது, நோயாளியினிடத்திலே அன்பு இல்லையானல் கவனித்து வேண்டியதைச் செய்யமாட்டான்.

இரண்டாவது, மனம் வாக்குக் காயத்தால் பரிசுத்தமுள்ளவனாக இருக்கவேண்டும். உதாரணமாக ஆசை ஒன்றுள்ளவனாக இருந்தாலே போதும். ஒரு தனவந்தன் ரணசிகிச்சை செய்துகொள்வதாக வைத்துக்கொள்ளுவோம். பணிவிடை செய்யப்பட்ட நரசுக்குப் பணம் தரவில்லையானால் ரணத்தைச் சுத்தி செய்யும்போது எவ்வளவு துன்பப்படுத்தலாம் என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே, தூயவர்களாக இருக்கவேண்டும்.

மூன்றாவது, வைத்தியர் சொல்லியபடியே காலாகாலத்தில் மருந்துகளைக் கொடுத்தல் நோயாளி சாப்பிடாவிட்டாலும் நயமாகவும் பயமாகவும் சொல்லி மருந்தை உள்ளுக்குச் சேர்ப்பிக்கவேண்டும்.

நான்காவது, அறிவுடையவனாக இருக்கவேண்டும். ஏன் என்றால் ஆறு வேளை மருந்து வைத்தியர் கொடுக்கச் சொல்லிவிட்டுப் போயிருக்கலாம். அம்மருந்தில் வெளிக்குப் போகக்கூடியது இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம்.

இரண்டு வேளை கொடுத்த உடனே அதிகமாகப் பேதியானால் மருந்தை நிறுத்தவேண்டாமா? அப்படிக்கின்றி வைத்தியர் கொடுக்கச்சொன்னார் என்று மேலும் கொடுத்தால் நோயாளிக்குக் கெடுதி செய்யுமல்லவா? ஆகவே, நரசுக்குச் சமயத்திற்குத் தகுந்த அறிவு இருக்கவேண்டும். இந்த நான்கு வகையான குணங்களும் உதவி செய்பவரிடத்திலே பொருந்தி இருக்கவேண்டும்.

நோயாளிக்கு இந்தப் பதினாறும் சேர்ந்தால்தான் பிணி நீங்கும். இவை சேர்ந்திராவிடத்து நோய் குணமடையாதிருப்பதைக் காண்கிறோம். இத்தனை காரணத்தையும் அறியாது மருந்தினால் நோய் தீரவில்லையே என்றும் வைத்தியர் இந்தப் பிணியைத் தீர்க்கவில்லையே என்றும் அவசரப்பட்டு இஷ்டம்போல் குற்றத்தை மருந்தின்மீதும் வைத்தியர்மீதும் கூறி வைத்தியக் கலைக்கே குறைபாட்டைத் தேடுகிறார்கள். பத்தியம் என்பது புளி, உப்பு, காரம் மாத்திரம் தள்ளுவதல்ல. இவைகளைத்தான் முக்கியமாகக் கவனிக்கவேண்டும்.

மேலும் பொது மறையாகிய திருக்குறளிலே ஒரு சிறு குறட்பாவில் இவ்வளவு ஆழ்ந்த கருத்துக்களை அமைத்திருப்பாரேயானால் தனி வைத்தியத்தைக் கூறவந்தவர்கள் என்ன தான் சொல்லி இருக்கமாட்டார்கள். வழக்கமாகக் கீரை சாப்பிட்டால் நல்லதென்றும் குணம் பொறுமையாகத் தெரியுமென்றும் கூறினால், ஒரு வேளை இரண்டு வேளை கீரையைச் சாப்பிடும்போதே குணமில்லை என்று எண்ணும் நண்பர்களும் இருக்கிறார்கள். ஒவ்வொரு கீரையிலும் ஒவ்வொரு சத்தும் லேசாக எல்லாச் சத்துக்களும் இருக்கின்றன. அதனை நாட்பட சாப்பிட்டால்தானே குணங்காண முடியும். அயம், வெள்ளி, தங்க பற்பங்களைச் சாப்பிட்டுவிட்டு

உடனே குணங்காணுவதைவிட கீரைகளின் மூலம் உடலிலே சத்து ஏறினுல் உடலோடுறைந்து கெட்டிப்பட்டு என்றும் தளராமலிருக்கும். நாளுக்குநாள் கிரமமாகச்செய்யும் குணமே மிக நல்லதென்பதை மறந்துவிடக் கூடாது.

எந்த மந்திரமாக இருந்தாலும் உறுதியாக ஜெபித்தவர்களுக்குப் பலனும், கொண்ட தெய்வத்தினிடத்தில் நம்பிக்கை வைத்து நடந்தவர்களுக்கு ஜெயமும், அறிந்த நல்ல மருந்தினை நிச்சய புத்தியோடு பிணி நீங்குமென்று சாப்பிட்டவர்களுக்குத் தேகசுகமும் ஏற்படுவதை நாம் அநுபவத்தில் பார்க்கின்ருேம்.

ஆகவே மந்திரம் தெய்வம் மருந்துமாகிய மூன்றிலும் நம்பிக்கையும் உறுதியும் யாருக்கு இருக்கிறதோ அவர்களுக்கு ஞாபகப் படுத்தி இத்துடன் நிறுத்துகிறேன்.

——(o)——

யார் பெற்ற செல்வம்!

திரு. M. A. C. பச்சையப்பா, கும்பகோணம்.

14-வது சீன்

(செல்வந்தர் வீடு)

(பர்வதா தனிமையில் உட்கார்ந்து, வானவெளியைப் பார்த்துப் பாடுதல், பாடி முடிந்ததும் மனச்சாட்சியுடன் போராடுதல்).

பர்வதா :—(தனிமையில்) அட தெய்வமே! பாழும் பணமிருந்தும் குணமில்லாதவர்களாய் இருக்கிருர்களே! நான் கட்டிய மனக்கோட்டை மணற்கோட்டையாகவல்லவோ மாறிவிட்டது! ம்......காதல் காதலென்ற பதத்திற்குக் கருத்துரை இதுதானு?

நீலநிற நிலவே நீயே சொல்! விண்ணிலே தவழும் வெண்ணிலாவே! வேதனையை ஏன் தருகிருய்! பாழும் தெய்வமே! கன்னித் தமிழ் நாட்டிலே, பெண்ணினத்திற்கு ஏனிந்தப் பெருந்துன்பம்! ஈசா! இதுவும் உன் சோதனையா? இயற்கையழகுக்கு ஈடிணை இல்லையென்று வாதாடும் என்னைப்போலுள்ள இளங்கன்னியர்களைத் தன்னந்தனியே தவிக்கவிட இந்நாகரீக மண்ணிலவதரித்த காளையர்களின் போக்கே இப்படித்தானு? அட கடவுளே! உன்னைக் கண்டகண்ட இடங்களிலெல்லாம் கையெடுத்துக் கும்பிட்டதற்கு இதுதானு பலன்?

(என்று பேசிவிட்டு, சோகமாகப் பாடுகிருள். பாடிமுடிந்ததும் பித்துப்பிடித்தவள்போல் சிரிக்கிருள்.)

(மனச்சாட்சியுடன் வாதாடுதல்)

மனச்சாட்சி :—அஹ்ஹஹ்ஹஹ்ஹா.........! பர்வதா! கடவுளைக் கண்மூடித்தனமாகத் திட்டாதே! பேதையே! நீ திட்டுவதால் அந்தக் கடவுள் உனக்குக் கைகொடுத்துக் காப்பாற்றுமென்று கருதுகிருயா? ம்.........பர்வதா கேள். எங்கும் நிறைந்த ஏகாந்த மூர்த்தியம்மா அவர்! நோவதில் பயனில்லை! செயற்கையாலேற்படும் சூழ்வினைக்கு இயற்கையை நொந்து பயன்?

பர்வ :—(மேலே பார்த்து லேசாகச் சிரித்தபடி) ஆம்! நோவதில் பயனில்லைதான்! ஊரை ஏமாற்றி உயர்ந்தோரென வேஷமிட்டுத் திரியும் உலுத்தர்களுக்கு உதவும் கடவுளை நொந்தும் பயனில்லை தான்!

மனச் :—விதியாரைவிட்டது பர்வதா! கேள். கட்டிய மனைவியிருக்க கண்ட பெண்களை நாடிச்செல்லும் கயவர்களைவிட உன் அத்தான் எவ்வளவோ மேலல்லவா!

பர்வ :—பேஷ்! வக்காலத்து எக்காலமிடும் வகையிலிருக்கிறதே? அஹ்ஹஹ்ஹஹ்ஹா!......என் அத்தான்! என்...... ராஜா......! கயவர்களைவிட மேலா? ம்......பேதாய்! பெண்ணினத்திற்கே அழிவுதேடும் பேதாய்! நீயே சொல். நீதியும் நேர்மையும் தவறியவன் கொற்றவனுயிருந்தாலும் குற்றம் குற்றந்தான்.

மனச் :—உண்மைதான் பர்வதா! நீதிக்கு என்றென்றும் அழிவில்லை என்பதை இப்போதாவது உணர்கிருயா? முடிசார்ந்த மன்னரெல்லாம் பிடிசாம்பல் ஆவது திண்ணமென்பதை நீ அறியாததா?

பர்வ :—ஆம்! அறிந்தும் அறிவிலியானதுதான் மிச்சம்!

மனச் :—பர்வதா! மனதைப் பேதலிக்க விட்டுவிடாதே.

பர்வ;—ஆமாம்! காதலித்தவளை மறந்து கண்டவளுடன் கூடிக்குலாவுவது முறையா?

மனச் :—முறையல்லதான்! நேர்மையை மறந்து நிலை தடுமாறிவிட்டான் உன் அத்தான். நங்காய் நலிவுருதே! இனியது ஒன்று உண்டென்று எண்ணி இன்பங்காண வழிதேடு பர்வதா!

பர்வ :—(சிரித்துவிட்டு) அதற்காகக் கண்ணிமைமூடி கனவுலகில் மூழ்கச் சொல்கிருயா? முடியாது, முடியவே முடியாது!

(என்று இரைந்து சப்தம் போடுகிருள். அச்சமயம் உள்ளிருந்துவந்த வேலைக்காரன்)

டல்லு :—ஏன் முடியாதுன்னு கேக்குறேன்? (என்று கேட்டபடி கிட்டவருதல்).

பர்வ :—(நிதானத்துடன்) (திரும்பிப்பார்த்து) யார் டல்லா? என்ன டல்லு ஏன் முடியாதுன்னு கேட்டுகிட்டே வர்றே? ஏதாவது கனவுகண்டு எழுந்துவர்றியா?

டல்லு :—இல்லே குழந்தே நம்ப நல்லுவை காசு கேட்டேன். முடியாதுன்னு! அதுக்குத்தான்......கேட்டுகிட்டே.........

பர்வ :—ஓகோ சரி டல்லு. எங்கப்பா நம்ப ராஜாவைப் பற்றி ஏதாவது அபிப்பிராயம் சொன்னாரா?

டல்லு :—சொல்லறது என்ன குழந்தே. இனி தம்பி இங்கே வந்தா ஒன்னும் நடக்காது. வீட்டிலேயும் அவரை அண்டவிடப் போறதில்லேயாம். அப்படின்னு அம்மாகிட்டே அய்யா சொல்லி கிட்டிருந்தார். அதுவரையிலும் எனக்குத் தெரியும் குழந்தே.

பர்வ ;—ம்......அப்படின்னு அப்பா ஒரே பிடிவாதமாயிருக் காருன்னே சொல்லு.

டல்லு :—ஆமாம்மா என்னசெய்யுறது?

பர்வ ;—(ஒரு போஸ்ட்கவரை டல்லுவிடம் கொடுத்து) டல்லு இதைக் கொண்டுபோய்த் தபால்பெட்டியில் போட்டுவா! (கையில் வாங்கியபடி)

டல்லு :—தம்பிக்காம்மா? திருந்தி நல்லமுறையில் வந்து சேருங்கன்னு எழுதுகிறதுதானேம்மா!

பர்வ :—அப்படிதான் எழுதியிருக்கேன். டல்லு போ நேர மாச்சி.

டல்லு ;—சரிம்மா........

15-வது சீன்

(ஜலா வீடு)

(ராஜாவும் ஜலாவும் எதிரெதிரே உட்கார்ந்து இருக்கிறார்கள். அதுசமயம் போஸ்ட் கவர் ஒன்றுடன் பௌன்டன் உள்ளே வருகிறான்)

பௌன்டன் :—ஹலோ ராஜா! உம் நேமுக்கு போஸ்ட்கவர் ஒன்லிஒன் கம்மிங்!

ராஜா :—ஐ......ஸி! தாங்க்ஸ் பிரதர்! (என்று கவரை வாங்குதல்)

பௌன் :—(கொடுத்தபடி) ராஜா ஒப்பன் பண்ணுங்களேன் விஷயம் புரிந்துபோகுது.

ஜலா :—(குறுக்கிட்டு) புரியுறதென்ன? மணி விஷயமாத் தானிருக்கும்!

ராஜா :—வெரிகுட் ஜலா! குட் அயிடியா. பௌன்டன்! நம் ஜலாவின் அயிடியாவே அலாதிதான் பிரதர்!

பௌன் :—இதோடவா? இன்னும் போகப்போகப் புரிந்து கொள்வீர்கள்!

ஜூலா :—மிஸ்டர் ராஜா! நம் பௌன்டன் நம்மிருவர் பேரி லும் ரொம்ப அன்புவைத்திருக்கிறார் இல்லையா ?

ராஜா :—இல்லேன்னு சொல்ல யார் துணிவார். என்னை உன்னோடு கனெக்‌ஷன் பண்ணினது இந்த சாக்ஷாத் பௌன்டனவர்கள் தானே! என்ன இருந்தாலும் இவர் ஒரு நியூமேன். ஜூலா நியூமேன்!

பௌன் :—வெரிகுட் பிரதர்! நியூமேன் டைட்டல்! புது மாடல்தான்! ம்......சரி ராஜா கவரை . . . .

(ராஜா கையிலுள்ள கவரைப் பிரித்துப் பார்த்துவிட்டு யோசனையிலிருக்கிறான்).

ஜூலா :—(கிட்டநெருங்கி) என்ன மிஸ்டர் ராஜா! ஏன் ஒரு மாதிரியா . . . . ?

பௌன் :—(நறுக்கிட்டு) இரு ஜூலா? என்ன உடம்புக்கு சொல்லுங்க ராஜா! இல்லே......மணி விஷயம் வாண்டெடா?

ராஜா :—(அலட்சியமாக) அட...அதெல்லாம் இல்லேப்பா! எனதருமை பர்வதா லெட்டர் போட்டிருக்கா.

ஜூலா : என்னென்னு ராஜா ?

ராஜா :—நானிங்கே காலித்தனமா நடப்பதாகவும், குடித்துவிட்டு கும்மாளம் போடுவதாகவும் உன்னைப்போலுள்ள கன்னியர்களுடன் கூடிக்குலாவி இருப்பதாகவும் கேள்விப்பட்டு ரொம்ப வருத்தப்பட்டு எழுதியிருக்கா ஜூலா! மேலும் என் மாமா வேறு ரொம்ப வருத்தத்துடனிருக்கிறாராம்!

ஜூலா :—அடடே! பித்துப்பிடித்து விடுவதற்குள் புறப்பட்டுவிடுங்கள் ர்ராஜா!

பௌன் :—ஆமாம்! சுத்த லூஸ்போலிருக்கு பிரதர் உன் மாமா? கீத்துமுடைகிற ஆளோ?

ராஜா :—பார்த்துப்பேசு பௌன்டன்! ஆனஸ்ட்ங்கறதே கொஞ்சங்கூடயில்லே உங்களிடம். நான்சென்ஸ்ஸுகளா?

பௌன் :—ஷட்டப் இடியட் ஆனஸ்ட் தெரியாத அன்வார் பயலிடம் நாங்க சேர்ந்தோம்பாரு. அது . . . .

ஜூலா :—எங்கள் பேரில்தான் மிஸ்டேக் ராஜா ம்......இனி மூட்டை கட்டவேண்டியது தான்

ராஜா :—(கோபமுடன்) கைக்கூலி வாங்கும் கயவனே! நிலையில்லா நீலியே! தேட்டைபோட நீங்களிவருவரும் இருக்கும் போது மூட்டை கட்டவேண்டியதுதான் நாங்கள். சீச்சீ! அற்பப் பதர்களா காசு பணம் உள்ளவரைதான் காதல் லீலைகள் இல்லையேல் . . . .

பௌளன் :—மோதல் ஏற்பட்டு மோசத்திலாழ்த்தும் மோசக் காரி சூழ்ச்சிக்காரி என்று நினைத்துப் பேசாதே ராஜா!

ஜூலா :—(கோபமுடன்) கெட்டாஅவுட் . . . . . ம் . . . . . போம் வெளியே!

ராஜா :—த்தா . . . . இடியட் இனி ஒரு நிமிஷமும் நில்லேன்.

——(o)——

சென்னை ராஜ்ய பருவதராஜ்யகுல சங்க

26-வது மாநாட்டின் வரவு செலவு

பிஷர்மென் கோவாபரேடிவ் சொசைட்டிகள் :—

	ரூ.	அ.
காவேரிப்பாக்கம்	25	0
குன்றத்தூர்	25	0
பூண்டி	25	0
முப்பங்தொட்டி	25	0
வெங்களத்தூர்	25	0
ஐயங்கார்குளம்	25	0
காஞ்சீபுரம்	25	0
வாலாஜாபாத்	10	0
உத்திரன்மேரூர்	25	0
கருங்குழி	25	0
தஞ்சாவூர்	25	0
கும்பகோணம்	25	0
சிதம்பரம்	25	0
வல்லம்படுகை	20	0
ஆலந்தூர்	25	0
மாகரல்	20	0
தேன்பாக்கம்	10	0
திருவாளர்கள் :		
K. பொன்னுசாமி நாட்டார்	25	0
M. மொட்டைன் பூசாரி தலைவர், பருவதராஜ குல சங்கம் ஆத்தூர்	25	0
R. வைத்தி நாட்டார், சங்கராபுரம்	25	0
குன்றத்தூர் சங்கம்	20	0
ஐயங்கார்குளம்	15	0

	ரூ.	அ.
திருவாளர்கள் :		
துரைசாமி நாட்டார், பூண்டி	10	0
ஆரணி சங்கம்	12	0
கருங்குழி சங்கம்	10	0
P. குட்டியப்ப நாட்டார் மயிலை	10	0
R. சோமசுந்தரநாட்டார்	5	0
E. முருகேச நாட்டார்	5	0
M துரைக்கண்ணு நாட்டார்.	5	0
A. வடமலை நாட்டார்	5	0
T. கபாலி நாட்டார் மயிலை	5	0
மைலாப்பூர் சங்கம்	5	0
வெங்களத்தூர் சங்கம்	5	0
R. பெருமாள் பக்தர், நரசிங்கபுரம்	5	0
ஷேக்தாவுத் சாயப்	2	0
அ, இராமசாமி நாட்டார் தியாகதுர்க்கம்	5	0
M. S. ஆறுமுகம்	5	0
மொத்தம் வரவு	589	0

சிலவு

G.O. 200, B.S.O. 211 திருத்தி ஆர்டர் 2-2-57 அனுப்பிய விஷயமாய் 2-2-57 முதல் 16-4-57 வரையில் மந்திரிகளுக்குப் பல பெட்டிஷன்களும், ஸ்டாம்பு ஒட்டின வகையிலும், பல தடவைகளில் அவர்களைப்பார்க்க டாக்ஸி, ஆட்டோ ரிக்ஷா முதலிய செலவுகள் செய்தவகையில் ரூ. 235 0

மாநாட்டின் செலவுகள் :

பிரிண்டிங் & பிளாக்	ரூ.	47	0
போஸ்டர் & ஒட்டுவதற்கு	ரூ.	38	0
வாழ்த்து & கண்ணுடி	ரூ.	10	0
தபால் செலவுகள்.	ரூ.	34	8
மந்திரிகள், பேச்சாளர்கள் நியமிக்க டாக்ஸி, வண்டி முதலியன	ரூ.	25	0
உள்ளூரில் வசூல்செய்ய	ரூ.	7	0
ஹாலுக்கு குடிக்கூலி	ரூ.	80	0
பந்தல்	ரூ.	10	0
மாலைகள்	ரூ.	12	0
சந்தனம், புஷ்பம், பன்னீர், தாம்பூலம்	ரூ.	5	0
சாப்பாடு	ரூ.	51	4
கிரஷ் அண்டு சோடா	ரூ.	10	0
பாதம்கிர்	ரூ.	10	0
மாவிலை தோரணம்	ரூ.	3	0
மேளம்	ரூ.	5	0
பியூன், ரயில் சத்தம் &c.	ரூ.	18	8
3 பாணர் தட்டி & போஸ்டர்	ரூ.	15	0
போட்டோ சார்ஜ்	ரூ.	14	0
செலவு	ரூ.	630	4
வரவு	ரூ.	589	0

வெள்ளி விழாவில் வசூல் :

ஆலந்தூர் சொசைட்டி	13	8	0			
திரு. ராமய்யா மூலம்	7	0	0			
				ரூ.	20	8
V. M. N (தலைவர்) நன்கொடை				ரூ.	20	12
				ரூ.	630	4

V. M. நடேச நாட்டார்,
தலைவர்.

"தேசிங்கு ராஜன்"

(ஆக்கியோன் திரு. கண்ணு நா. அரங்கன்,
சின்னசிரகப்பாடி)

டில்லி பாதுஷா ஷாஆலத்தினிடம் பக்கிரியால் பரிசாகக் கொடுக்கப்பட்ட "நீலவேணி" என்னும் பெயர்பூண்ட குதிரை ஒன்று இருந்தது. அது மகா வல்லமைபொருந்தியது. அதை அடக்கி ஆள அவரால் ஆகவில்லை. எனவே "எவன் ஒருவன் அக் குதிரையை அடக்கி ஆளுகின்றனோ, அவனுக்கு வேண்டிய அன்பளிப்பு அளிப்பதாகவும், அப்படி ஆள ஆகாது போனவனைச் சிறையில் அடைப்பதாகவும்" டில்லி பாதுஷா ஷாஆலம் அறிவித்திருந்தார். இதனை அறிந்த பல குறுநிலக் கோமான்கள் அக் குதிரையை அடக்கிஆள பேரவாக்கொண்டு டில்லியை நோக்கிப் பயணமாயினர். அவர்களின் பயணம் அவர்களனைவரையும் கம்பி சூழ் காவற்கூடத்திலே கைதிகளாக்கிற்று. அங்ஙனம் கைதி ஆக்கப்பட்டவர்களிலே செஞ்சி நாட்டு மன்னர் தரணிசிங்கும் ஒருவர்.

தரணிசிங் நிறைகர்ப்பமாய் இருக்கும் தன் இல்லாள் இராமாபாயிடம் இருந்து விடைபெற்றுச் சென்றவர். தனது கணவன் சிறைப் படுத்தப்பட்ட செய்தியை அறிந்த இராமாபாய் மனம் வருந்தி பின் ஒருவாறு மனந்தேறி சின்னுட்களில் ஓர் ஆண் மகவை ஈன்றெடுத்தாள். இச்செய்தி காட்டுத் தீப்போல நாடெங்கினும் பரவலாயிற்று. செஞ்சி மன்னர் தரணிசிங்கிற்கும் செய்தி அனுப்பப்பட்டது. அம்மகவிற்குத் "தேசிங்கு" என்று பெயரிட்டு வளர்க்கலாயினர். அவனும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்க்கப்பட்டு வளர்பிறை சந்திரனைப்போல வளர்ந்து பின் வாலிபப் பருவம் எய்தினன். அவனுக்கு சையத் கானின் மகன் "மகமத்கான்" என்னும் முகமதிய வீரன் உயிருக்குயிர் நண்பனானன். இருவரும் ஓர் உயிர்என எண்ணித் தம்வாழ்க்கையை நடத்தலாயினர். அவர்கள் இருவரும் பதினறு வயதிற்குள் வாட்போர். மற்போர், குதிரை ஏற்றம், யானை ஏற்றம், வில் வித்தை ஆகிய எல்லாக் கலைகளையும் எளிதில் கற்று தங்களுக்கு நிகர் தாங்களே எனத்திகழ்ந்தனர்.

ஒரு நாள் தேசிங்கும் மகமத்தும் வேட்டையாடி அரண்மனை திரும்புகையில், தேசிங்கு தன் நண்பன் மகமத்திடம் விடைபெற்று அரண்மனையின் அந்தப் புறத்தில் தன் தாயைக்காண வருகிருன். அவ்வமயம் தாய்: (திரை விலகுகிறது)

காட்சி 1

இடம் :—அரண்மனையின் அந்தப்புறம்

காலம் :—பிற்பகல்

உறுப்பினர்கள் :—தேசிங்கு, இராமாபாய்

(இராமாபாய் தன்கணவன் படத்தைத் தன் எதிரில்வைத்துப் பாடல் மூலம் வணங்கிக் கொண்டிருக்கிருள். பாட்டு முடிய வணக்கத்தை முடித்துக்கொண்டு அவ்விடத்தினின்றும் எழுந்து வர, அவ்வமயம் தேசிங்கு உள் நுழைந்தவாறே)

தேசிங்கு :—அம்மா !

இராமாபாய் :—(தன் மகனைக் கண்டதும்) வாடா ! என் செல்வமே !

தே :—(அன்னையின் முகத்தைப் பார்த்தவாரே) அம்மா ! என்றும் களிப்புடன் காணவேண்டிய தாங்கள் இன்று கண்ணீரும் கம்பலையுமாய்க் காணக் காரணம் ?

இரா ;—(தன் புடவையின் தலைப்பில் தன் முகத்தைத் துடைத்தவாறு) கண்ணே ! நீ என்னருகில் இருக்கும்வரை நான் ஏன் கவலை கொள்ளவேண்டும் ? கானகத்தில் வேட்டையாடிய தின் களைப்பு உனக்கு. முதலில் உன் களைப்பைத் தீர்த்துக்கொள்! வாபோகலாம். (என்று தாய் அழைக்க, தனயன் படம் இருக்கும் திக்கை நோக்குகிருன். படத்தைக் கண்ணுற்ற காளை தேசிங்கு படத்தின் அருகில்சென்று படத்தைச் சுட்டிக்காட்டியவாறே தன் தாயை நோக்கி)

தே ;—அம்மா ! இது யாருடைய படம் ! (தாய் மௌனம் சாதித்தல்).

தே :—(படத்தைக் கையில் எடுத்து தாயிடம் காட்டியவாறு மீண்டும்) அம்மா ! இது யாருடைய படம் ? (தாய் மீண்டும் மௌனம்)

தே :—மௌனம் ! ஏனம்மா மௌனம் சாதிக்கிறீர்கள் ! (சிறிது யோசித்து பின் ஆத்திரத்தோடு) அம்மா! அறிந்துகொண் டேன் தங்களின் மௌன நிலையை. நான் சந்தேகப்படும்படி செய்த இப்படம் எனக்கு இன்னல்களைத்தான் அளிக்குமே தவிர இன்பத்தை அளிக்காது. அன்னையே! இப்படம் யாருடையது என்று இறுதியாகச் சொல்லுகிறீர்களா ? இல்லை ஈமச் சடங்கு களுக்குத் தங்களைத் தயார்செய்து கொள்ளுகிறீர்களா ? (என்று கூறித் தன்கரத்தில் இருக்கும் படத்தைத் தூக்கிஎறிய, அது அங்கு விரிக்கப்பட்டிருந்த பஞ்சு மெத்தையின்மேல் விழுந்துவிடுகிறது. பின் தாயின் கழுத்தை நெறிக்க தன் கரங்களைக்கொண்டு செல் கிருன். அப்பொழுது தாய்)

இரா :—(சோகமாக) மகனே ? ஆத்திரத்தில் அறிவிழந்து பேசிவிட்டாய் ? "சிந்தனைசெய்யா மனமும், செயலாற்ரு வாழ் வும் சவக்குழியில் சரண்புக" என்றுகூறிய மேலை நாட்டு அறி ஞரின் வாக்கு வன்மையை ஆராயாது அர்த்தமற்றதாகப் பேசி விட்டாய்! ஆராய்ந்து பார்! நீ பேசியது சரியா என்று. தேசிங்கு!

2254

நீ சந்தேகப்படும்படி செய்த, அப்பஞ்சு மெத்தையின்மேல் கிடக்கும் படம் வேறு யாருடையதும் அல்ல! உன் தந்தையின் திருவுருவே தான். தேசிங்கு உன் தந்தையின் திருவுருவே தான். (என்று கலங்குகிருள்).

தே :—(ஆச்சரியமாகப் படத்தை எடுத்து தன் நெஞ்சிதனில் இறுகத்தழுவி, பின் தாயிடம் படத்தைக்காட்டியவாரே உணர்வு ததும்ப) அம்மா! அப்பாவின் திருவுருவா இது!

இரா :—ஆம்! தேசிங்கு உன் அப்பாவின் திருவுருவே தான்! தேசிங்கு வாழ்க்கையில் நான் ஒருவருக்கே வாழ்க்கைப்பட்டேன்! அதுவும் இப்படத்தில் காணக்கூடிய உனதப்பாவுக்கே வாழ்க்கைப் பட்டேன்! (இதைக் கேட்ட தேசிங்கு மனம்பதறி)

தே :—அம்மா! என்னை மன்னியுங்கள்! மறந்துவிடுங்களம்மா முன்னையதை! (என்றுகூறித் தாயின் காலடியில் விழுகிருன்)

இரா : (தன் காலடியில் கிடக்கும் தேசிங்கைப் பார்த்து) வருந்தாதே தேசிங்கு!

தே :—வருந்தாதே அம்மா! எப்படி அம்மா வருந்தாமல் இருக்கமுடியும்! கற்புநெறி தவருத தங்களைக் கற்புநெறி தவறிய தாக நினைத்துத் தாறுமாருகப் பேசிவிட்டேன்! என் தாயே! தங்கள் மனம்மகிழ என்னை மன்னித்தேன் என்று சொல்லுங்களம்மா! சொல்லுங்கள்! (என்று கதறுகிருன்)

இரா :—(தன் காலடியில் கிடக்கும் மகனைப்பார்த்து) கலங்காதே என் ஜீவியமே! உணராமல் செய்த குற்றத்தை நீயே உணர்ந்துகொண்டாய்! **உன்** மனமே உன்னை மன்னித்துவிட்டது! எழுந்திருடா என் செல்வமே!

தே:– (படத்தை மீண்டும் தாயிடம் சுட்டிக் காட்டியவாறு) அம்மா! ஏனம்மா என்னிடம் இதை இத்தனை நாட்களாகக் காண்பிக்கவில்லை!

இரா :—கண்ணே! இத்தனை நாட்களும் உனக்குத் தெரியாது தான் வணங்கிவந்தேன்! எத்தனை நாட்களுக்குத் தான் இப்படி வணங்குவது! 'எல்லாம் அவன் செயல்' என் செல்வமே இவர் இன்னும் உயிரோடுதானிருக்கிருர்!

தே :—உயிரோடிருக்கிருர்! எனதப்பா உயிரோடிருக்கிருர்! அம்மா? எங்கே இருக்கிருர்! எங்கே அம்மா இருக்கிருர்? (தாய் மௌனம் சாதித்தல்)

தே :—மீண்டும் மௌனமா அம்மா! சொல்லுங்கள்! சொல்லுங்களம்மா! அவர் எங்கே இருந்தாலும் அழைத்து வருகிறேன். அதுவும் எப்படி அழைத்து வருவேன் தெரியுமா? புத்தாடை பூண்டு, பூப்பல்லக்கிலே வைத்து, தாரை தப்பட்டைகள் முழங்க,

பிறபுவிமன்னர்கள் புகழும்படி அப்புண்ணியவானைப் பவனிவர அழைத்துவருவேன் அம்மா! அழைந்துவந்து அவரைத் தங்களின் அருகே இருத்தி இருவரின் கமலப் பாதங்களிலே வீழ்ந்து வணங்கி உங்கள் இருவரின் ஆசியையும் பெறுவேன்நான். அதைப்பார்த்துப் பரவசமடையவேண்டும் தாங்கள். அம்மா! சொல்லுங்கள்! இப்பொழுதாவது சொல்லுங்களம்மா அப்பாவின் இருப்பிடத்தை.

இரா :—கண்ணே! அதைமட்டும் என்னிடம் கேளாதே!

தே ;—(சிறிது யோசித்து) அம்மா! எனக்கு விடைகொடுங்கள். அரண்மனைசென்று அரை நொடியிலே திரும்புகிறேன்!

இரா:—கண்ணே! களைப்புத்தீரப் புசித்துப் பின்செல்லலாமே!

தே ;—இல்லையம்மா! எனக்குப் பசி இல்லை! நான் உடனடியாக எனது முதல் நண்பன் முகமதிய வீரன் மகமத்கானைக் காணவேண்டும் விடை தாருங்கள் தாயே!

இரா :—சரி! சென்றுவா மகனே!

தே :—வருகிறேன் அம்மா. (என்று கூறிவிட்டுச் சென்றுவிடுகிறான்).

காட்சி 2

இடம் :—அரண்மனையின் கலா மண்டபம்

காலம் :—மாலைப்பொழுது

உறுப்பினர்கள் :—தேசிங்கு, மகமத்

(மகமத் கலா மண்டபத்தில் உலவிக்கொண்டு இருக்கிறார். அதுசமயம் தேசிங்கு உள் நுழைகிறார். தேசிங்கைக் கண்ட மகமத்)

மகமத் :—யார்! தேசிங்கா?

தேசிங்கு :—ஆம் தேசிகங்கன் தான்! உனது ஆருயிர் நண்பன் தேசிங்கன் தான் (என்று ஆனந்தத்துடன் கூறுகிறான்).

மக :—(மகமத் சிரித்தவாறு) தேசிங்கு! ஏது இன்று என்றுமில்லா ஆனந்தம்!

தே :—என்றுமில்லா ஆனந்தம் தான் மகமத்! இன்று எனக்கு என்றுமில்லா ஆனந்தம் தான்! உம்! மகமத்! எனதப்பா உயிரோடிருக்கிறார்!

மக: உயிரோடிருக்கிறார்! உனதப்பா உயிரோடிருக்கிறார்! சீரோடு வாழ்ந்த செஞ்சி நாட்டு மன்னர் உயிரோர்டிருக்கிறார்! மங்காத புகழ்படைத்த அம்மாணிக்கம் உயிரோடிருக்கிறார்!

தே :—ஆம்! மகமத்! உயிரோடிருக்கிருர்! மங்காத புகழ் படைத்த அம்மாணிக்கம் மாளவில்லை! மாண்டுவிட்டதாக மாற்று வதந்தியைக் கிளப்பி என்னை மீளாத் துயரத்திலே ஆழ்த்திவிட்டனர் இவ்வரண்மனையிலுள்ளோர்!

மக :—(தேகிங்கனின் கைகளைப் பிடித்தவாறு) தேசிங்கு எங்கே இருக்கிருர்? எங்கே தேசிங்கு இருக்கிருர்?

தே :—(மகமத்தின் கைகளை உதறியவாறு) உயிரோடிருக்கிருர் என்பது உண்மை! ஆனல், அவர் எங்கே இருக்கிருர் என்பதுமட்டும் தெரியவில்லை! எனது அன்னையைக் கேட்டால் "அதை மட்டும் என்னிடம் கேளாதே" என்கிருர். இந்நிலையில் என்னல் என்ன செய்வதென்று ஒன்றுமே புரியவில்லையே மகமத்! ஒன்றுமே புரியவில்லை!

மக :—(சிறிது யோசனைசெய்து தேசிங்கனைப் பார்த்து) தேசிங்கு! தலைக்கோட்டை வாயிலில் இருக்கும் தளபதியார் வரட்டும் . . . .

தே :—வந்தால் . . . . , . . .

மக :—அவருக்கொரு சமயம் தெரிந்திருக்கலாமென எண்ணுகிறேன் :

தே :—இருக்கலாம்! மகமத்! தெரிந்திருக்கலாம்! உம் மகமத் தலைக்கோட்டை வாயிலில் இருக்கும் தளபதியார் வந்ததும் நாளை மாலை மணிமண்டபத்தில் என்னைச் சந்திக்கச்சொல்!

மக :—ஆகட்டும் தேசிங்கு! அப்படியே செய்கிறேன்! (அது சமயம் சேவகன் ஒருவன் வருகிருன்.)

சேவகன் :—இளவரசே! தங்களை அழைத்து வருமாறு இராணியார் உத்தரவு!

தே :—நான் வந்துகொண்டிருப்பதாகத் தெரிவி போ!

சேவ :—உத்தரவு இளவரசே! (என்றுகூறி சென்றுவிடுகிருன்).

தே :—மகமத்! நான் சென்றுவரட்டுமா!

மக :--சென்றுவா தேசிங்கு! நானும் பயிற்சி சாலைக்குச் சென்றுவருகிறேன்!

(இருவரும் செல்லல்) (தொடரும்).

—(o)—

187254

எல்லாவிதமான கைத்தறி ஜவுளிகளும்,

மில் ஜவுளிகளும், பல ரகங்களிலும்

விலை நயமாகக் கிடைக்கு மிடம் :-

V. K. வேதகிரி நாட்டார் &

V. J. முனிரத்ன நாட்டார்.

மில் மேட் & கைத்தறி ஜவுளி வியாபாரம்

விரிஞ்சிபுரம். (N. A. DT.)

குறைந்த விலை ! *கரூர் விலை !!*

சர்வ விசேஷங்களுக்கும், சுப முகூர்த்தங்களுக்கும்

உங்களுக்கு வேண்டிய ஆடைகளுக்கு

ஸ்ரீ லெக்ஷ்மி விலாஸ்

ஜவுளி மாளிகைக்கு விஜயம் செய்யுங்கள்

புத்தம் புதிய ரகங்கள் ! உள்ளங்கவரும் ஆடைகள் !

உத்திரவாதமுள்ள ஜவுளிகள் !

பல்லாயிரக்கணக்கான ரகங்களில், உயர்தரமான பட்டு மில் & கைத்தறி ஜவுளி தினுசுகள் ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம்.

தங்கள் வருகையால் பெரிதும் மகிழ்வு அடைவீர்கள் என்பது திண்ணம்.

அன்பர்கள் அனைவரும் விஜயம் செய்யக்கோருகிறோம்.

உங்கள் திருப்தியே எங்கள் நோக்கம்.

அன்பன்

வீ. ப. சிவஞானம் நாட்டார்,

ஜவுளி வியாபாரம், காட்டுமன்னார்குடி.



BUY ALWAYS

OUR
BEST
QUALITY

FINE & DELICIOUS
TO DRINK

COFFEE

RAW, ROAST & GROUND

OUR SCENTED NUTS—A SPECIALITY

Sawmy's Coffee Mfg., Co.,

262, NETAJI SUBHAS CHANDRA BOSE ROAD, MADRAS-1.

PHONE No. 3687.

Phone : 3165 Grams : COCHUTNI

ஸ்ரீ கணேஷ்ராம்ஸ்

777 பிராண்டு

உணவு தயாரிப்புகள், சென்னை-1.

ரவா தோசை பவுடர்

ரவா தோசை பவுடர்

1½ டம்ளர் தண்ணீரில் 1 டம்ளர் ரவா தோசை பவுடரை கலந்ததும் தோசை சுடலாம். உப்பு, காரம் எதுவும் தேவை இல்லை. சட்டினியும் தேவையில்லை.

சாம்பார் பேஸ்டினால் சாம்பார் செய்ய

வெந்த பருப்பு தண்ணீரில் நபர் ஒன்றுக்கு ஒரு டீ ஸ்பூன் விகிதம் கலந்தால் போதும். உப்பு, புளி, மசாலா முதலியவை சேர்க்க தேவை இல்லை.

ரசம் பேஸ்டு: ஷை சாம்பார் போல் தயாரிக்கவும்.

மதராஸ் கறி பவுடர்: பிரிஞ்சி, குருமா, கறி, பொரியல் முதலியவைகளுக்கு சிறந்தவை.

Editor, Printer, Publisher: Sri V. M. Natesam, Goodland & Co.,
55, Muthumari Chetty Street, Madras-1,